விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 24 | ஞாயிற்றுக்கிழமை (06.02.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 49

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.R 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# பொதுக் கட்டமைப்பை நிறுவுவதில் அரசின் போக்கு சாத்தியமாக இல்லை



## இனியும் அதனை நம்பிக் கொண்டிருக்க முடியாது என்கிறார் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளை புனரமைப்பதற்கான சர்வதேச உதவிகளை பொதுக்கட்டமைப்பு ஒன்றினூடாகப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிர்மறையான முடிவுகளைத் தான் அரசு தெரிவித்திருக்கிறது.

இதனால் பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சி நம்பிக்கை தருவதாக இல்லை என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக் கட்டமைப்பு பற்றி ஜனாதிபதி செயலகத்தில் பேச்சு

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக அறியமுடிகின்றது.

இத்தகைய முயற்சிகள் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுக்கும் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் பேச்சுக்கள் இடம் பெற்றுவருவதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுவரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு சர்வதேச நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

பகுதிகளில் அரசாங்கம் உரிய முறையில் நிவாரணப் பணிகளை முன்னெடுக்கவில்லை. நிவாரண உதவிப் பணியில் இடம்பெற்ற முறையீடுகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகள் வந்த வண்ணம் உள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வெளிநாடுகள் வழங்கிய நிதியையும், நிவாரணப் பொருட்களையும் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் சமனாகப் பகிர்ந்தளிக்கவில்லை. குறிப்பாக சுனாமிப் பேரலையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவரை நிவாரணங்கள் எதுவும் உரியமுறையில் விநியோகிக்கப்படவில்லை.

அதுமட்டுமன்றி நிவாரணப் பணிகளுக்

செய்வதாக முறைப்பாடுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

நிவாரணப் பணிகளுக்கென ஒதுக்கிய நிதியை அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தி வருகின்றது. இவை தவிர அரச அதிகாரிகளும் நிவாரண மோசடிகளில் ஈடுபடுவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் அவர்களை சேவையில் இருந்து அரசு இடைநிறுத்தியுள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகிவருகின்றன.

இவ்வாறு அரசும் அரச அதிகாரிகளும் தவறான முறையில் நிவாரண உதவிகளை அபகரிக்க முயற்சிக்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளும் இதே குற்றச்சாட்டையே சுமத்துகின்றனர். இதனால் சர்வ

## பஸ் - வான் விபத்து

(புங்குடுதீவு)

குறிகட்டுவானிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வடபிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்து குறிகட்டுவான் நோக்கிச் சென்றுகொண்டிருந்த வானும் மோதி விபத்துக்குள்ளாகியது. நேற்று மாலை 3 மணியளவில் (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜோர்ஜ் புஷ், பில்கிளின்ரன் 21ம் திகதி இலங்கை விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ் (தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தந்தை) மற்றும் பில் கிளின்ரன் ஆகியோர் கடல்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கை உள்ளிட்ட இந்துசமுத்திர கரையோர நாடுகளுக்கு

திபதி செயலகத்தில் பேச்சுக்கள் இடம் பெற்றுவருவதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுவரும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு சர்வதேச நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் சமனாகப் பகிர்ந்தளிக்கவில்லை. குறிப்பாக சுனாமிப் பேரலையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவரை நிவாரணங்கள் எதுவும் உரியமுறையில் விநியோகிக்கப்படவில்லை.

அதுமட்டுமன்றி நிவாரணப் பணிகளுக்கென வெளிநாடுகள் அரசுக்கு வழங்கிய நிதியை அரசாங்கமே துஷ்பிரயோகம் இருந்து அரசு இடைநிறுத்தியுள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகிவருகின்றன.

இவ்வாறு அரசும் அரச அதிகாரிகளும் தவற்றான முறையில் நிவாரண உதவிகளை அபகரிக்க முயற்சிக்கின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளும் இதே குற்றச்சாட்டையே சுமத்துகின்றனர். இதனால் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஊடாக

(14 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ் (தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் தந்தை) மற்றும் பில் கிளின்ரன் ஆகியோர் கடல்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கை உள்ளிட்ட இந்துசமுத்திர கரையோர நாடுகளுக்கு இம் மாதம் விஜயம் செய்யவுள்ளனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் (14 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு மனிதவுரிமை செயலகத்துக்கு நோர்வே குழு

(கிளிநொச்சி)


கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரும் அவரது குழுவினரும் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு விஜயம் செய்து உளவளதுணை நிபுணர்களை சந்தித்துக் கலந்துரையாடினர்.

மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண. பிதா எம். கருணாரட்ணம் அடிகளார் அவர்களை வரவேற்று உளவளத்துணை ஆலோசகர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

போராட்டங்கள், யுத்தங்கள் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உளவள ஆலோசனைகள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்றவாறு மாற்றங்கள் செய்யப்படுவதன் அவசியம் குறித்து கருணாரட்ணம் அடிகளார் விளக்கிக் கூறினார்.

அத்துடன் வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலகம் எதிர்நோக்கும் குறைபாடுகள் குறித்தும் எடுத்து விளக்கினார்.

(த)






நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகளை வழங்குமாறு ஐரோப்பிய ஆணைக்குழுவிடம் ரணில் கோரிக்கை

(பிரஸ்லஸ்)

ஐரோப்பிய ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கு அமைய உபயோகிக்கப்படாமல் இருக்கும் 12 அடி நீளமான படகுகளையும் சிறிய அளவிலான நோவர் இயந்திரப் படகுகளையும் ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட இலங்கை மீனவர்களுக்குத் தந்துதவுமாறு ஐரோப்பிய ஆணைக்குழுவிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் வெளியுறவு மறறும் அயல் நாட்டுக் கொள்கை தொடர்பான ஆணையாளர் பெனிட்டா பெரேரா வோல்டினை பிரஸ்லஸ் நகரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்திய போதே ரணில்விக்கிக்கிரமசிங்க இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளதாக எதிர்க்கட்சி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப் பேரலைகளின் பின்னர் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புகளின் கூட்டுத் தலைமையை வகிக்கும் கூட்டத்துக்கு பெனிட்டா பெரேரா வோல்டின் தலைமை தாங்கியிருந்தார்.

ஆழிப் பேரலைகளின் அனர்த்தத்தின் போது கடற்றெழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களில் 60 வீதமான படகுகள் சேதமடைநதுள்ளன.

ஆழிப்பேரலைகளினால் ஆசியப் பிராந்தியத்தில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மீனவக்குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என எடுத்துக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர் அந்தக் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதில் சில் சிக்கல்கள் இருப்பதாகவும் எனவே அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் வகையில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் கொள்கைகளுக்கு அமைய உபயோகிக்கப்படாமல் இருக்கும் படகுகளைத் தந்துதவுமாறும் கோரிக்கை விடுத்தார்..

இதற்குப் பதிலளித்த பெனிட்டா பெரேரா வோல்டின் சேதமடைந்த படகுகளின் விபரங்கள் திரட்டப்பட்ட பின்னர் அதற்கு ஏற்ப படகுகளை இலங்கைக்குத் தந்துதவ முடியுமெனத் தெரிவித்ததாக எதிர்க்கட்சி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

# கிழக்கில் (சா/த) விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாகக் கிழக்கு மாகாணத்தில் ஒத்திவைக்கப்பட்டிருந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை விடைத்தாளகள் திருத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் கல்முனை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் 8 மதிப்பீட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இவற்றில் ஜனவரி 3ஆம் திகதி மதிப்பீடு நடத்தத் திட்டமிட்டிருந்த போதிலும் அனர்த்தம் காரணமாக அவை இடம் பெறவில்லை.

எனினும், மட்டக்களப்பில் விடைத்தாள்கள திருத்தும் பணிகள் எதிர்வரும் 15 ஆம் திகதியே மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (ற)

# கரவெட்டி கிழக்குப் பகுதியில் வலுக்குறைந்த மின்சாரம்

(துன்னாலை)

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டம், தச்சன்தோப்பு, யார்க்கரு பகுதிகளில் வலுக்குறைந்த மின்சாரமே விநியோகிக்கப்படுவதாகப் பாவனையாளர்கள் விசனம தெரிவிக்கின்றனர்.

தமது பகுதியில் முன்னர் பல (ரானஸ் போமர்கள்) நிலை மாற்றி பொருந்தப்பட்டிருந்ததாகவும் மீண்டும் மின் இணைப்பு வழங்கப்பட்ட வேளை அவை பொருத்தப்படவில்லையெனவும்.

உடனடியாக கிழவி தோட்டப்பகுதிககாவது ஓர் நிலைமாற்றியை பொருத்தித்தர வேண்டுமெனவும் அப்பகுதிமக்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு குறிந்த வலுமின் சாரம் கிடைப்பதால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அப் பகுதிமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (க-101)

# இராசிபலன்

06.02.2005 (தை 24ஞாயிற்றுக்கிழமை)
இராகுகாலம் 05.05 - 06.35 மணிவ்வரை
சுபநேரம் 09.35 -11.05 மணிவரை
பூராடம் பி.இரவு 3.13 வரை
துவாதசி நண்பகல் 12.04 வரை
சித்தாமிர்தம், பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | ரோக நிலை, புதிய தொழில் சிந்தை, காரிய தாமதம், பெரியோர் மனஸ்தாபம். |
| இடபம் | ஆரோக்கிய குறைவு, முயற்சி தாமதம், வீண் மனஸ்தாபம், அதிஷ்டக் குறைவு. |
| மிதுனம் | செல்வாக்கு, குடும்ப மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, சத்துருஜெயம். |
| கடகம் | உறவினர் சந்திப்பு, உற்சாகம், காரிய அனு கூலம், மன மகிழ்ச்சி. |
| சிங்கம் | தாழ்ந்த சுபாவம், சிறுவியாபாரம், முயற்சி தாமதம், வியாபார விருத்தி. |
| கன்னி | சத்துரு ஜெயம், வேலையில் ஆர்வம், காரிய தாமதம், வீண் பயம். |
| துலாம் | சகோதரரால் மகிழ்ச்சி, தனவரவு, பிரயாண நன்மை, தேக நலன். |
| விருச்சிகம் | இடமாற்றம், முயற்சி தாமதம், கடின வார்த்தை, திடீர் நன்மை. |
| தனுசு | சயன சுகம், எடுத்தகாரியம் கைகூடும், தொழில் சிந்தை, பெரியோர் உதவி. |
| மகரம் | அமைதிக் குறைவு, நண்பர்கள் சந்திப்பு, காரிய அலைச்சல், சுக செலவு. |
| கும்பம் | பெரியோரினால் அவமதிக்கப்படல், தொழில் நன்மை, முயற்சி கைகூடும், தெய்வ சிந்தை. |
| மீனம் | புதியதிருப்பம், சுக நிகழ்வு, உற்சாகம், அதிக பிரயாசை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

# பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் மீண்டும் கடமைகளில் இணைவு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல அரச ஊழியர்களும் தத் தமது வேலைத்தளங்களில் வழமையான கடமைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்புட்டவர்களுக்கு சகல நிவாரணங்களையும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வார இறுதி நாட்களிலும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். இறநத ஒவ்வொரு நபரின் சார்பில் அவரவர் குடும்பத்தினருக்கு 15 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கவும், சமையலறை உபகரணங்களுக்கென 2 ஆயிரத்து 500 ரூபாவும் நாளை உலர் உணவுகளைக் கொளவனவு செய்ய 375 ரூபாவும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளைக் கண்காணிக்கவென கொழும்பிலிருந்து விசேட உத்தியோகஸ்தர் குழு அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# நிவாரண விநியோகத்தில் மோசடி; சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணியிலிருந்து இடை நிறுத்தம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை தவறுதலாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் மூன்று கிராம சேவகர்களை அரசாங்கம் பணியில் இருந்து இடைநீக்கம் செய்திருக்கிறது.

மேலும் 10 பேர் இதேபோன்ற குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்படாதவர்களுக்கு உதவிகளை வழங்கியமை தொடர்பாக உள்ளூர் அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாக, சுனாமியால் மிகவும் மோசமாகப் பாதிககப்பட்ட காலப்பகுதிக்கான அரசப பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடமைவேளையில் மதுபோதையில் இருந்தமைக்காக மற்றுமொரு உத்தியோகத்தர் மாத்தறை மாவட்டத்தில பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அதிகார வர்க்கம் மற்றும் செயற்பாட்டுத் திறன் ஆகியவற்றினால் ஏற்பட்டதாமதங்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களில் 75 சதவீதமானோர் எந்தவிதமான உதவியையும் இதுவரை பெறவில்லை என்று அரசு ஒப்புக்கொண்டுள்ளது. (ற-4)

# மீன்பிடித் தொழில் இயல்புக்குத் திரும்புகிறது

(கொழும்பு)

'சுனாமி' பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த மீன்பிடித் தொழில் படிப்படியாக இயல்பு நிலைக்கு திரும்புகின்றது.

பேருவலை மீன்பிடித்துறை முகத்தில தற்போது தினமும் 30 தொன் மீன் கிடைக்கப்பெறுகின்றது. சுனாமி அனர்த்தத்திற்கு முன்னரும் இதே அளவு மீன் இங்கு பிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மீன்பிடித்தொழில் மிகக் குறைவான மட்டத்தை அடைந்திருந்த நிலையில இருந்து இப்பொழுது சிறிது, சிறிதாக உயர்வான மட்டத்தை அடைந்து வருவதாக கடற்றொழில் சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தேசிய அபிவிருத்தி வங்கியின் தரவுகளின்படி அரசாங்கத்தில் பதிவு செய்யபபட்ட 80 சதவீதமான படகுகள் சேதமடைந்துள்ளன.

இதனால் மீனவர்கள் தொழிலை மேற்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் 70 சதவீதமான படகுகள் பாதிக்கப்பட்டுள்ளன, மற்றும் கடலுக்குள் கிடக்கும் குப்பை கூழங்கள் காரணமாக மீன் பிடிப்பதிலும் சிரமங்கள் தோன்றியுள்ளது. (ற)


# சிறுவிளம்பரம்

## தவறிவிட்டது

610, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இராசரத்தினம் சரவணமுத்து என்பவரது அடையாள அட்டைகள் சாரதி அனுமதிப்பத்திரம் அடங்கிய பேஸ் முகமாலைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் வியாழக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற் கூறிய விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும் T.P 222 3665 சன்மானம் வழங்கப்படும்.
(9256)

## மாருதி கார்

தினசரி 1000/- வீதம் செலுத்தி புத்தம் புதிய மாருதி காரினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

360/5 பிரதான வீதி, பஸ்தியன் சந்தி அருகில் சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 077-6660177, 0777-738146.
(9258)


# அ.அட்டை கண்டெடுப்பு

(எழுதுமட்டுவாழ்)

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த தம்பு மகேந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும். (ற)

# மயானத்தில் மண் அகழ்வு

(துன்னாலை)

துன்னாலை, ஓடைக்காடு மயானத்தில சட்டவிரோதமாக ஹன்டர் வாகனங்கள் சிறு உழவு இயந்திரங்கள் மற்றும் சைக்கிள்களில் தினமும் இரவு பகலாக மண் அகழ்வதால் மயானத்தில் வெள்ளம் தேங்கும் நிலை உருவாகியுள்ளது.

அத்துடன், சிறார்கள் புதைக்கப்பட்ட புதைகுழிகளுக்கு அருகிலும் மண் அகழப்பட்டு வருவதாகவும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன், இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் குழுக்களில் ஒரு பகுதியினரை தவிர்த்து விட்டு சிலரை மட்டுமே பொலிஸாரிடம் காட்டிக் கொடுப்பதாக சிலர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

எனவே, கிராமசேவகர்கள், பொது அமைப்பினர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி இப்பகுதியில் மணல் அள்ளுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் தரப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க மேற்படி மயானத்தில் உள்ள நிழல் தருவிருட்சமான ஆலமரத்தின் இலைகளை சிலர் வியாபாரத்திற்காக வெட்டிச் செல்வதாகவும், இதனால் இறுதிக்கிரியை செய்யவருவோர் வெயிலில் நிற்கவேண்டியுள்ளதாகவும் பொதுமக்களால் குறை கூறப்படுகிறது. (க-101)

# தளபாடம் அன்பளிப்பு

(துன்னாலை)

நெலலியடி வதிரியில் இயங்கி வரும் வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கத்திறகுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை தனது பன் முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வழங்கியுள்ளார்.

இதேவேளை, ஆழிப்பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிகை அலங்கரிப்புத் தொழிலாளர்களுக்கும் உதவிகள் வழங்கப்படவேண்டுமென வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம தொண்டு நிறுவனங்களைக் கோரியுள்ளது.

குறித்த அனர்த்தம் நிகழ்ந்த கரையோரப் பகுதிகளில் சொத்துக்கள் தொழில் ஸ்தாபனங்கள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் இதனால் பொருளாதார கஷ்ட நிலையில் தமது உறுப்பினர்களுக்குத் தொழில் கருவிகள் மற்றும் உதவிகள் வழங்குமாறும அச் சங்கம் சம்பந்தப்பட்ட உதவி வழங்கும் தொண்டு நிறுவனங்களிடம் கோரியுள்ளது. (க-101)

# ஈழத்துச் சித்தர்களின் ஞான ஊற்று நயினை முத்துக்குமார சுவாமிகள்

ஈழத்துச் சித்தர் வரிசையில் ஞான ஊற்றாகத் திகழ்ந்தவர் தான் நயினாதீவுச் சாமியார் என்று போற்றி வழிபடப் பெற்ற முத்துக்குமார சுவாமிகள். இளமையில் ஞானம் கைவரப்பெற்ற இவர் நயினாதீவில் வாழ்ந்த ஆறுமுகம் பார்வதி தம்பதியருக்கு ஆறாவது மகனாக 1897 ஆம் ஆண்டு அவதரித்தார். இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் முத்துக்குமாரு என்பதாகும். அன்று நயினாதீ விலிருந்த தில்லையம்பல பாடசாலையில கல்வி பயின்றார்.

சிறு வயதில் நயினை ஸ்ரீ நாகபூசனி அம்பாளின் திருவருளால் கவிபாடும் திறமை பெற்றார். சிறுவயதில் கொழும்பில் பொறளையில் அவரின் தமையனாரின கடையில் வேலை செய்து வந்தார். அப்போது 1915 சோனக, சிங்கள சமூகங்களுக் கிடையில்கலவரம் மூண்டகாரணத்தினால் அக்கம் பக்கத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் சிங்களவர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர். இவ் அகோரக்காட்சியைக் கண்ட முத்துக்குமாரு உள்ளம் வெதும்பி வேதனைப்பட்டார். தமையனார் வேறு கடைகளுக்கு கொடுத்து விட்டு வரும்படி கொடுத்தனுப்பிய சுருட்டை களனியாற்றில் வீசி விட்டு மறைந்து விட்டார். தமையனார் இவரைப் பல மாதங்களாகத் தேடிப்பிடிக்க முயன்றும் இவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவரை ஆட்கொள்ள வந்த குரு ஒருவரோடு கதிர்காமம் சென்று பின் இந்தியா சென்று சன்னியாச வாழ்வை மேற்கொண்டார். பின் திருவெண்ணாமலையில் சித்தர்களும் தவஞானிகளும் வாழும் அருணாவாசன குகைகளில் சில காலம் சமாதி நிட்டையில் அமர்ந்திருந்தார். பின் ரமண மகரிஷியுடன் சல காலம் தங்கியிருந்து ஞான ஜோதியாக இலங்கை திருமபினார். கொழும்பில் முகத்துவாரம் அருணா அலேஸ்வர ஆலயத்தில் சில காலம் தங்கி அருள்ஞானத்தைப் பரப்பிய சுவாமிகள் யாழ்ப்பாணத்திற்கு தன்னைத் தந்த நயினாதீவுக்கு 1933 ஆம் ஆண்டு வருகை தந்து நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வடமேற்கு மூலையில் உள்ள அன்னைப்பிள்ளை மடத்தில தங்கி ஞான நிட்டையல் அமர்ந்து தியானத்தில் இருந்தார். சுவாமகள் தியான நிட்டையில் அன்று இருந்த காரணத்தினால் தான் இன்று தியான மடமாக அம்மடம் போற்றப்படுகிறது.

> நயினாதீவுச் சாமியார் என்று அழைக்கப்பட்ட நயினை முத்துக்குமார சுவாமிகளின் குருபூசை இன்று நயினாதீவில் அமைந்துள்ள அவரின் சமாதி ஆலயமான சோமஸ்கந்த ஈஸ்வரர் ஆலயத்தில் பூசைவழிபாடு, பஜனை, மகேஸ்வர பூசையுடன் கொண்டாடப்படுகின்றது.

நயினை முருகன் ஆலயத்தில் ஞானநிட்டையில்அமைந்து தியானம் செய்த சுவாமகளை நடு இரவில் சென்று வழிபட்டு ஞானம் பெற்றவர் தான் ஈழத்து இல்லறஞானி எனப் போற்றப்பட்ட நயினை க.இராமச்சந்திரா அவர்கள். சுவாமிகளின் வேண்டுதல் காரணமாகத்தான் ரமண மகரிஷியைச் சென்று தரிசித்தார்.

சுவாமிகளின் முக்கிய சீடனாகத் திகழ்ந்தவர் நயினை பெரிய உபாத்தியாயர் அமரர் ச.ஞா.கந்தையா அதிபர் அவர்கள். நயினையில் ஒரு கல்விப் பரம்பரை உருவாகவும் நயினை நாகபூசணி அம்பாள் ஆலயம் பொது அறச் சொத்தாகவும் வருவதற்கு மூலகாரண கர்த்தாவாகவும் உந்து சக்தியாகவும் இருந்தவர் பெரிய உபாத்தியார் முத்துக்குமார சுவாமிகளின் சாமாதி ஆலயமான சோமஸ்கந்த ஈஸ்வர ஆலயம் நயினாதீவில் அருள் ஒளி பரப்புவதற்கு காரண கர்த்தாக்களில் உபாத் நாகபூசனி அம்பாள் ஆலயம் பொது அறச்சொத்தாகவும் வருவதற்கு மூல காரணகர்த்தாவாகவும் இருந்தவர்.

சுவாமிகள் நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் தேரடியில் அமர்ந்திருந்த பொழுதுதான் சிவலிங்கப்புளியடியில வசிப்பவர்களான முன்னாள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அதிபர் சண்முகரத்தினமும் அவர் குடும்பத்தினரும் கண்டு சுவாமிகளை வழிபட்டு சுவாமிகளின் அருள் ஆசி பெற்றதோடு சுவாமிகளைத் தங்களின் குடும்பத்தின் அருள்ஞானக் குருவாக அன்றே ஏற்றுக் கொண்டனர். அவர்களின் சிவலிங்கப்புளியடி இல்லம் சுவாமிகளின் வதிவிடமாகும் பெரும் பாக்கியம் பெற்றது. மேற்படி இலலத்தில்தான் 1949 ஆம் ஆண்டு தைமாதம் 26 ஆம் திகதி பிரதோஷ காலமும் பூராட நட்சத்திரமும் பொருந்திய நடு இரவில் சுவாமிகளின் ஆத்ம ஜோதி சிவப பேரொளியில் ஒன்றியது.□

**நா.கோபாலகிருஷ்ணர்**
**நயினாதீவு**

# சிரமதானப் பணியில் ஐ.தே.க

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி நேற்று முன்தினம் சிரமதானப்பணிகளை ஆரம்பித்திருக்கிறது.

ஐக்கியதேசியக் கட்சியின் பிரதிச்செயலாளர் திஸ அத்தநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமியினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண பிரதேசங்களில் இந்த சிரமதானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்களுக்கு உரிய நிவாரணங்கள் இதுவரையில் வழங்கப்படவில்லை என்பதை இந்த மக்களுடன நேரடியாக உரையாடியபோது தெரிந்துகொள்ள முடிந்தது.

எனவே அரசாங்கம் இந்த மக்களுக்கு நிவாரண உதவிகளை உரிய முறையில் வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

(க-9)

# வெளிநாடுகளின் நிவாரணப்பணி பாராட்டப்பட வேண்டியதாம்

## ஜே.வி.பி.கூறுகிறது

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்தத்தைத் தொடர்ந்து மனிதாபிமான நடவடிக்கையில் உதவுவதற்கு வருகைதந்த வெளிநாட்டு படைகளுக்கு ஜே.வி.பி நன்றி தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் போது, இலங்கையில் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து மக்களை மீட்கும் நடவடிக்கைகளை சிறப்பான முறையில் முன்னெடுத்த சகல வெளிநாட்டு படைகளுக்கும் கட்சி சார்பில் நன்றி தெரிவிப்பதாக கூறியிருக்கின்றார்.

ஒரு நாட்டில் வேறு நாடுகளின் படைகள் நுழையும் போது அது அந்தநாட்டின் இறைமையை பாதிக்கும்.

ஆனால், இலங்கையில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வருகின்ற வெளிநாட்டுப் படையினர் ஆயுதமினறி நிராயுத பாணிகளாகவே இலங்கை வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து விதமானஉதவிகளையும் வெளிநாட்டுப்படைகள் மேற்கொண்டு இருப்பதாகவும் ஜே.வி.பி தலைவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தற்போது தமது பணி களை நிறைவு செய்துள்ள இந்தப் படைகள் தமது நாடுகளுக்கு திரும்புகின்றன. இந்த வேளையில்,அவர்களது அளப்பெரிய பணிகள் குறித்து தாம் மகிழ்ச்சியடைவதோடு அவர்களுடைய சேவையை பாராட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

(க-9)

# ஹைடன் ஆட்டத்தைப் பார்க்க ஆசை -ஹர்பஜன் சிங்


ஹைடன் ஆட்டத்தைப் பார்க்க ஆசை,

இப்படி தனது ஆசையை வெளியிட்டிருப்பவர் யார் என்று உங்களால் யூகிக்க முடிகிறதா?

அவுஸ்திரேலிய அணி கப்டன் ரிக்கிபொண்டிங் என்று நீங்கள் நினைத்தால் தவறு? இந்திய கிரிக்கெற் அணியின் நட்சத்திர சுழல் பந்துவீச்சாளர் [illegible] கையில் ஹர்பஜன் சிங் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளதாவது,

அவுஸ்திரேலிய அணியின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் மத்யூஹைடன். கடந்த ஆண்டு அவுஸ்திரேலிய அணியின் இந்திய சுற்றுப் பயணத்தில் அவரை விரைவிலே ஆட்டமிழக்கச் செய்தோம். அவருக்குப் [illegible] ஆட அவரைத் தூண்டுவோம். அநத வலையில் ஹைடன் எளிதாக வீழ்ந்து விடுவார். எங்களின் இந்தத் திட்டத்தை மற்ற நாடுகளும் பின்பற்று கின்றன. இதனால் தான் தற்போது அவரால் சிறப்பாக துடுப்பாட இயலவில்லை.

ஒரு ரசிகனாக அவரின் பழைய ஆட்டத்தைப் பார்க்க ஆசைப்



தமிழக வீரர் நரேன் கார்த்திகேயன் எஃப் 1 எனப்படும்

ஹர்பஜன் சிங்தான் தனது இந்த விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் உள்ள 'தி சிட்னி மார்னிங் ஹெரால்ட்டு' பத்திரி

கச் செய்தோம். அவருக்குப் பந்து வீசுவது கடினமான ஒன்று அடித்து விளையாடக் கூடிய வீரர்களில் அவரும் ஒருவர்..

எல்லைக்கோட்டருகே பீல்டர்களை நியமித்து அடித்து

ஆட்டத்தைப் பார்க்க ஆசைப்படுகிறேன். எங்களுக்கு எதிராக என எண்ணிவிடவேண்டாம். மற்ற நாடுகளுக்கு எதிராக அவர் விளாச வேண்டும். அவ்வளவு தான. இவ்வாறு பேட்டியில் தெரிவித்துள்ளார் ஹர்பஜன்சிங்.

**தமிழக வீரர் நரேன் கார்த்திகேயன் எஃப் 1 எனப்படும் பார் முலா -1 கார் பந்தயத்தில் கலந்துகொள்வது அதிகார பூர்வ மாகியுள்ளது ஜோர்டன் கிராண்ட் பீரி அணிக்காக 2005 ஃபார் முலா -1 உலக சாம்பியன் போட்டியில் பங்கேற்கவுள்ளார். 28 வயதாகும் கோவை வீரர் கார்த்திகேயன்**

# விளையாட்டு செய்திகள்

## இந்தியச் சுற்றுப் பயணத்தில் அக்தருக்கு வாய்ப்பு கிடைக்குமா

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சொகிப் அக்தருக்கு இந்திய சுற்றுப்பயணத்தில் வாய்ப்புவழங்குவது தொடர்பாக பெரும் சர்ச்சை நிலவிவருகிறது .

அக்தர் மீது அண்மையில் சுமத்தப்பட்ட குற்றச்செயல்களின் பின்னரே இந்நிலை ஏறபட்டிருக்கின்றது.

இவரை இந்திய சுற்றுப் பயணத்திற்கான பாகிஸ்தான் அணியில் சேர்ந்து கொள்வதற்கு அவ்வணியின் முன்னணி வீரர்கள் பலர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இவருக்கு அத்தொடரில் விளையாடும் வாய்ப்பு அளிக்கப்படும் பட்சத்தில் இந்தியாவிற்கான பயணத்தை புறக்கணிக்க போவதாக முனனணி வீரர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நாட்டு நலன் கருதி தமது வீரர்கள் ஒற்றுமையுடன் செயல்பட்டு வருவதாகவும் அவர்களிடையே குழப்பநிலை எதுவும் இல்லை என்றும்பாகிஸ்தான் கிரிக்கெட்சபைதெரிவித்துள்ளது.(த)

## பான் பசுபிக் டெனிஸ் அரையிறுதிக்கு ஷரபோவா

பான பசுபிக் ஓபன் டெனிஸ் தொடரில் விம்பிள்டன் சாம்பியன் மரியா ஷாபோவா அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் பான் பசுபிக் ஓபன் டெனிஸ் தொடர் நடக்கிறது. காலிறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடந்தன.

இதில் இரண்டாம் நிலை வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா, சக நாட்டவரான எலீனா லிகோவட்செலாவை எதிர்த்து விளையாடினார்.

மரியாவின் துடிப்பான ஆட்டத்தினால், விரைவில் தோல்வியை ஒப்புக் கொண்டார். எலீனா இவரை 6-3, 6-3 என்ற நேர் செட்களில் வீழ்த்திய மரியா அரை இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் யு.எஸ்., ஓபன் சம்பியனான ரஷ்யாவின எலினா டெமன்டீவா 3-6, 4-6 என்ற செற்களில் ஜப்பானின் ஷனோபு அசாகியிடம் அதிர்ச்சித்தோல்வி அடைந்தார்.

அரையிறுதியில் ஷனோபு மரியாவைச் சந்திகிறார். முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவிக் லின்ட்சே டேவன் 6-1, 6-2, என்ற செட்களில் செக் குடியரசின் இவெடா பனோசோவைஎளிதில் வீழ்த்தி, அரையிறுதிக்கு தகுதி பெற்றார். (ற)

## இன்று ஒரு தகவல்

### சேர்க்கும் பணம் செல்லுபடியாகுமா?

ஒரு பெரியவர் இருந்தார். மிகவும் வசதி படைத்தவர். அவர் எப்போதும் கையில் ஒரு தடி வைத்திருப்பவர். தினமும் வீட்டு வாசலில் வந்து கம்பீரமாக உட்கார்ந்திருப்பார். அவர் ஒருநாள் ஒரு சாதாரண ஆளைப் பார்த்தார். இவர் வசதி எதுவுமில்லாதவர். மிகவும் ஏழை. "இப்படி வா" என்று அந்த ஏழையைக் கூப்பிட்டார் பணக்காரர். அவரும் "என்ன?" என்று கேட்டுக்கொண்டே அருகில் வந்து நின்றார்.

அந்தப் பணக்காரர் சொன்னார். "இதோ பார்! உன்னை விட மூடனை நான் இதுவரையில் பார்த்ததில்லை. அதனால இதோ இந்தத் தடியை உன்னிடம் இப்போது தருகிறேன்" என்று கூறி அதை அந்த ஏழையிடம் கொடுத்தார். அவரும் அதை வாங்கிக் கொண்டு "சரி... இதை வாங்கிக் கொண்டு நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார். "இதை நீ உன்னுடன் வைத்திரு! உன்னை விட மூடனை நீ எப்போது சந்திக்கிறாயோ அப்போது இதை நீ அவனிடம் கொடுத்துவிடு" என்றார் அவர். 'சரி' என்று கூறிவிட்டு இவரும் அந்தத் தடியை வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

அதன் பின் பல வருடங்கள் ஆகிவிட்டது. தன்னை விடவேறு மூடனை அந்த ஏழை பார்க்கவே இல்லை. அதனால் அந்தத் தடி அவரிடமே இருந்தது. இப்படியே காலம் போய்க்கொண்டிருந்தது. ஒருமுறை அந்தத் தடியைக் கொடுத்த அந்தப் பணக்காரருக்கு உடல் நிலை சீரற்றுவிட்டது. அவருக்கு உடல்நிலை சரியில்லை என்பதைக் கேள்விப்பட்டார் இந்த ஏழை. "சரி! போய் என்னவென்று பார்த்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டார்.

அந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தார். அரண்மனை மாதிரி வீடு! இருந்தும் என்ன பயன்? அவர் மிகவும் மோசமான நிலைமையில் ஒரு சிறிய கட்டிலில் படுத்துக் கிடக்கிறார்."தான் இனிமேல் பிழைக்கமாட்டேன்" என்பது அவருக்கு நன்கு புரிந்துவிட்டது. இந்த ஏழை மெதுவாக அவருக்குப் பக்கத்தில் போய் நிற்கிறார். "இப்போது உடல்நிலை எப்படி இருக்கிறது?" என்கிறார். அதற்கு அவர் "நான் இந்த ஊரை விட்டுப் போகப் போகிறேன்" என்று நினைக்கிறேன் என்றார்.

"அப்படியென்றால மீண்டும் எப்போது திரும்புவீகள்?" என்றார் அவர். "அந்த ஊருக்குப் போனால் திரும்பி வர முடியாது" என்றார் பணக்காரர். "அப்படியென்றால் அங்கே உங்கள் செலவுக்கு வேண்டிய பணத்தை எடுத்துக கொண்டு போகிறீர்களா?" என்றார் இவர். "அது தானே முடியாது! இந்த ஊரின் பணம் அந்த ஊரில் செல்லாது! கொஞ்சக்காலமே வாழப்போகின்ற இந்த ஊரில செலவு செய்வதற்கு நான் எவ்வளவோ பணம் சம்பாதித்தேன். ஆனால் அந்த ஊரில் எந்தப் பணம் செல்லுபடியாகுமோ அந்தப்பணத்தை சம்பாதிக்காமல் விட்டுவிட்டேன்" என்று சொல்லி வருத்தப்பட்டார். "அது என்ன பணம்" என்று கேட்டார். "அதுதான் புண்ணியம்" என்ற பணம்.

கபீர்தாசர் என்ன சொல்கிறார் என்றால் "ராம நாமம் தான்" அந்தப் பணம் என்கிறார். போகும் போது கூட அதை எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்கிறார்.

# நிவாரணப் பொருட்களின் விநியோகம் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகிறது

## -நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

இலங்கையில் 'சுனாமி' ஆழிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக தமது அரசாங்கம் வழங்கிவரும் நிவாரண உதவிகள் எவ்வாறு நிர்வகிக்கப்படுகின்றது என்பது குறித்து மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாக நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் பேணாட் பொட் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித பேதமுமின்றி நிவாரணங்கள் சென்றடைய வேண்டுமென்பதே எமது நோக்கமாகும்

200 மில்லியன் அமெரிக்க டொலருக்கு மேலதிகமான தொகையை அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம பாதிக்கப்பட்ட நாடுகளுக்குப் பகிர்ந்தளிக்க எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமியினால் பெருமளவு பாதிக்கப்பட்ட இலங்கையிலும் இந்தோனேசியாவிலும் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 200 மில்லியன் அமொிக்க டொலர்களை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பது குறித்து அந்தந்த நாடுகளிடமிருந்து தெரிந்து கொளள வேண்டிய அவசியமிருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ரு-8)

# சர்வதேச மாணவர் பேரவையினருடன் உ.தொ.நு.நிறுவனப் பிரதிநிதிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினருக்கும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும இடையில் சந்திப்பு ஒன்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.





இச்சந்திப்பில் உயர் தொழில்நுட்ப நிறுவனப பிரதிநிதிகள் சார்பாக உயர் தொழில்நுட்ப நிறுவனச் செயலாளர் நாயகம் டாக்டர் எச்.எம்.உபயசேகர, யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் இராஜரட்ணம் ஆகியோரும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை சார்பில் அதன் இணைப்பாளர் கண்ணன், பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ள வசதியீனங்கள் குறித்தும், வன்னியில் உயர் தொழில்நுட்ப நிறுவனக் கிளையொன்றை ஆரம்பிப்பது பற்றியும், மாணவர்களுக்கு நவீன வசதிகளுடன் நிரந்தரக்கட்டடம் ஒன்றை அமைபபது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

மேற்படி வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு உயர் தொழில்நுட்ப நிறுவனச் செயலாளர் நாயகம் டாக்டர் எச்.எம்.உபயசேகரா உடன்பாடு தொிவித்தார்.

(ரு-8)

# சுகாதார சேவைகளை மேம்படுத்த இலங்கைக்கு இந்தியா உதவிவழங்கும்

## -இந்திய உயர்ஸ்தானிகர்

(கொழுமபு)

பௌதிக், மனிதவளங்களை வழங்குவதன் மூலம் இலங்கையின் சுகாதார சேவைகளுக்கு உதவ இந்தியா முனவந்துள்ளது.சுகாதார அமைசசா நிமால் சிறிபாலடிசில்வாவை இந்தியாவின் உயாஸ்தானிகர் நிருபமாராவ் நேற்று முன்தினம் சந்தித்தபோதே இந்த உதவி பற்றி தெரிவித்தாா.

நுட்பத்திற்கு அமைய யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாந்தோட்டை வைத்தியசாலைகளைப் புனரமைப்பதற்கும் நிதி வழங்கப்படவுள்ளது.



...குறிப்பிட்டார். "அது என்ன பணம்" என்று கேட்டார். "அதுதான் புண்ணியம்" என்ற பணம்.

கபீர்தாசர் என்ன சொல்கிறார் என்றால் "ராம நாமம் தான்" அந்தப் பணம் என்கிறார். போகும் போது கூட அதை எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்கிறார். அந்த ஏழை தன் கையில் இருந்த அந்தத் தடியையும் அந்தப் பணக்காரரையும் மாறிமாறிப் பார்க்கிறார். பணக்காரர் படுக்கையில் இருந்தபடியே இதைக்கவனிக் கிறார். "என்ன யோசிக்கிறாய்? அந்தத் தடியை என்னிடமே தா! என்னைவிட மூடன் வேறு யார் இருக்க முடியும்?" என்றார்.

இறைவன் நாமத்தைச் சொல்வதென்றால் வெறுமனே உச்சரிப்பது மட்டுமல்ல. அது நமது மனதைப் பக்குவப் படுத்த வேண்டும். புண்ணிய காரியங்களைச் செய்வதற்கு அது காரணமாக அமையும். இந்தக் காலத்திலெல்லாம் நம்மிடம் யாராவது அது போன்ற ஒரு தடியைத் தந்து "உன்னை விட மூடனை நீ பார்க்கும் போது கொடுத்து விடு" என்று சொன்னால் அப்படி கொடுப்பதற்கு நீண்ட நாள் ஆகாது.

நான் கூட அப்படிச் செய்து பார்த்தேன். எனது நண்பர் ஒருவரிடம் ஒரு பேனாவைக் கொடுத்து "நீ கொஞ்ச நாள இதனால் எழுது. அதன்பின் உன்னை விட யாராவது அசடு இருந்தால் அவரிடம் இதைக் கொடுத்துவிடு" என்று சொன்னேன். அவன் அதை வாங்கிப் பார்த்தவுடனே என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு "நீதான் அசடு" என்றான். ஏன் என்று கேட்டேன். "ஒரு வாரத்திற்கு முன்பு நான்தான் இதை உன்னிடம் கொடுத்தேன். இந்தப் பேனாவில் ரீஃபில் இல்லை. ரீஃபில் இல்லாத பேனா எப்படி எழுதும்?" என்று என்னிடம் திருப்பிக் கேட்கிறான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

---

...பௌதிக, மனிதவளங்களை வழங்குவதன் மூலம் இலங்கையின் சுகாதார சேவைகளுக்கு உதவ இந்தியா முனவந்துள்ளது.சுகாதார அமைசசா நிமால் சிறிபாலடிசில்வாவை இந்தியாவின் உயாஸ்தானிகர் நிருபமாராவ் நேற்று முன்தினம் சந்தித்தபோதே இந்த உதவி பற்றி தெரிவித்தா.

இதற்கமைய, இந்தியா மருத்துவர்களையும், மருத்துவ தொழில்நுட்பவியலாளர்களையும் இலங்கைக்கு வழங்கவுள்ளது.உளவியல் ஆரோக்கியம் தொடர்பான செயற்பாடுகளுக்காக ஏற்கனவே மூன்று இந்திய வைத்திய நிபுணர்கள் அம்பாறை மற்றும் கல்முனைப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மருத்துவ வசதிக்கான நிதியுடன், நவீன தொழில்நுட்பத்திற்கு அமைய யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாந்தோட்டை வைத்தியசாலைகளைப் புனரமைப்பதற்கும் நிதி வழங்கப்படவுள்ளது.



நிக்கோயா ஆதார வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள சிவில் பொறியியலாளர்கள் மற்றும் கட்டடக் க்லை நிபுணர்களை உள்ளடக்கிய குழு ஒன்று விரைவில் இலங்கைக்கு வர இருப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## உருத்திரபுரப் படுகொலை நினைவு நாள் அனுஷ்டிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் இலங்கை விமானப படையினர் நடத்திய குண்டுவீச்சில் உயிரிழந்த 9 அப்பாவி தமிழ்மக்களின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

1991ஆம ஆண்டு இலங்கையின் சுதந்திர நாளன்று விமானப் படையினர் உருத்திரபுரம் கூழாவடியில் நடத்திய கொடூர குண்டுத்தாக்குதலில் 9 அப்பாவித் தமிழ்மக்கள் துடிதுடித்து உயிரிழந்தனர். உயிரிழந்த மக்களை நினைவு கூரும் நிகழ்வு 9.30 மணியளவில் உயிரிழந்த மக்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள தூபியடியில் நடைபெற்றது. உருத்திரபுர வலய தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் த.அருந்தவச்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மைச் சுடரினை கிளிநொசசி மாவட்ட தேசிய எழுச்சிப பேரவை பொறுப்பாளர் திருமாறன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்ததுடன், படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபிக்கான முதல் மலர் மாலையினை அணிவித்தார். தொடர்ந்து படுகொலை செயயப்பட்டவர்களின் உறவினர்கள் நினைவுத் தூபியில மலர்தூவி வணக்கம் செலுத்தினர். நிகழ்வின் இறுதியில நினைவுரைகளும் இடம்பெற்றன. (ச)

## திருட்டு முயற்சியில் கணவன்– மனைவி!

(மூளாய்)

பாலர் பாடசாலை சிறுமியிடம் தந்திரமாக பேசிய இளம் குடும்பத்தினர் அச் சிறுமியிடம் இருந்த தோட்டை அபகரித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவம் மூளாய்ப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, வீதியால் சென்று கொண்டிருந்த பாலர் பாடசாலை சிறுமியிடம் கணவன் உரையாடிக் கொண்டு வர மனைவி தந்திரமாக தோட்டை க்ழற்றிச் சென்று நகைக் கடையொன்றில விற்றதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறிப்பிட்ட சிறுமி தோட்டை கழற்றிய இளம் குடும்பத்தினரை தன்னுடைய பெற்றோருக்கு அடையாளம் காட்டிக் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து சிறுமியின் பெற்றோரினால் தோட்டைத் திருடிய கணவன் மனைவி இருவரும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-39)

# 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
26
04
1926

மறைவு
19
01
1993



## அமரர் உயர் திரு. இ. ச. பேரம்பலம்

E.S.P. & Co

## திதி. 6-2-2005

மூன்றெழுத்து நாமத்தை முக்காடு போட்டு
நிலை நிறுத்த நின்ற விநாயகனே !
பதின் + எட்டு கோயில் கொண்ட
காரையம்பதி வாரிவளவு. தனில்
பதியதுவாம் சான்றோர் நித்தமுற
நினைத்திட வாழ்ந்த ஐயாவே !
உலகு புகழ் கொழும்பு மாநகர் தனில்
ஓங்கி ஒளிபரப்பும் நிறுவனமாம்
E.S.P என்னும் தங்கள் புகழ் நாடிச்செல்ல
வாழ்வளித்த பண்புருவே !
கருத்தொரு சொல் பேசாத கனவானென்ற
கண்ணியத்தைப் படைத்தவனே! உன் நாமம் வாழி
சிவதருமம் தவறாது வாழ்ந்த எங்கள் ஐயாவே !
உங்கள் ஆத்மா சாந்தியடைய
12ஆம் ஆண்டு நினைவு நாளில் மணிஓசை தனில்
இறைவனைத் துதிக்கின்றோம் ஐயாவே !

ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

மணிஓசை
383, கோவில் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்

(C/1071)



# ஆயுதம்

திரை விமர்சனம்

மருத்துவக் கல்லூரி மாணவன் சிவா. தவறுகளைத் தட்டிக்கேட்கும் குணம்கொண்டவன். சிவாவுக்கும் சக மாணவி மகாவுக்கும் காதல் ஏற்படுகிறது.

ஆனால் காதல் என்ற பெயரில் மகாவை யாரும் நெருங்கவே முடியாது. அவரைக் கண்ணால் பார்த்தாலே கையை வாங்கிவிடும் தாதா வில்லன்தான் அதற்குக் காரணம். இப்படி கையை, காலை, உயிரை இழந்தவர்கள் பட்டியல் சொல்லிமாளாது. மகாவின் கழுத்திலும் வில்லன் பெயர் பொறித்த தங்கச் சங்கிலி அதை உறுதிசெய்துகொண்டே இருக்கும்.

இதற்கிடையே சிவா – மகா காதல் வில்லன் நாகாவுக்குத் தெரியவர, வில்லன் தனது வேலையைக் காட்டுகிறான். அமைச்சர்கள், பொலிஸ் அதிகாரிகள் எல்லாம் வில்லன் காலடியில் கிடந்தும் சிவாவை ஒன்றுமே செய்யமுடியாமல் போகிறது.

சிவா, மகாவின் பெற்றோரைக் கடத்தி தீர்த்துக்கட்ட ஆள அனுப்புகிறான் வில்லன் நாகா. ஆனால் அதற்குமுன் சிவா அவர்களைக் காப்பாற்றி ரகசிய இடத்தில் தங்கவைக்கிறான்.

அதன்பின் நாகா வெளிமாநிலத்துக்கு தப்பிவிட்டதாகச் செய்தி பரப்பி மகாவின் தந்தையைக் கொன்றுவிட்டு மகாவைக் கடத்துகிறான்.

இதனால் ஆக்ரோஷமாகும் சிவா, வில்லன் நாகாவுடன் மோதி அவனை அழிப்பது கிளைமாக்ஸ்.

சிவாவாக வரும் பிரசாந்துக்கு இது அக்ஷன் படம். தாடி, மசையுடன் பொலிஸுடன் மோதுவது, சினேகாவை தாக்க வரும் ரவுடி கூட்டத்தை நொறுக்குவது, வில்லனை அழிபபது என விறு விறுப்பாக



காட்சிகளில் மிளிர்கிறார்..

மகாவாக வரும் சினேகா கவர்ச்சியிலும், நடிப்பிலும் கலக்கல். பிரசாந்துக்கும், சினேகாவுக்கும் நடக்கும் ஊமை, செவிடு பாஷை சிரிப்பு.

இதற்கிடையில் காமெடியில் தனி டிராக்காக வந்து செல்கிறார் வடிவேலு. அவரின் 'பிறபாக்கெற்' காமெடி கலக்கல்.

நாகாவாக வரும் மன்சூர் அலிகான் வில்லன் பாத்திரத்தில் தனது திறமையைக் காட்டியிருக்கிறார். இவர்களுடன் ஜனகராஜ், ராஜேஷ், சுப்புராஜ், மீனல், அஜய், ரத்னம், சிங்கமுத்து, கலைராணி, சூசன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

சமீபத்தில் வெளியான பல அக்ஷன் படங்களைச் சேர்த்து கலவையாகத் தந்திருக்கிறார் இயக்குனர்.

இசை –தினா. பாடல்களிலும், பின்னணி இசையிலும் அவர் இன்னும் ஆரம்பப் பாடத்தைக்கூட கற்றுக்கொள்ளவில்லை போல் இருக்கிறது.

***மொத்தத்தில் ஆயுதம் - ஆர்ப்பாட்டம்.***



'6.2'
சத்யராஜ்,
சுனிதா வர்மா

# ஜெயம் ரவியின் எரிச்சல்!

விநியோகஸ்தர்களின் பயம் போக்குகிற நடிகர்களில் ஜெயம் ரவியும் ஒருவர். பணம் காய்க்கிற மரமாகவே இவரைத் தயாரிப்பாளர்களும் கருது



கிறார்கள் . அப்படிப்பட்ட ஜெயத்திற்கே பயத்தைக் கொடுத்திருக்கிறார் நடிகை சதா!

ஏன்? எப்படி? எதற்கு? இப்படி அடுக்கடுக்கான கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்டாலும், 'சதாவைப் பற்றிக் கேக்காதீங்க' என்பதுதான் ரவியின் பதிலாக இருக்கிறது.

'ராஸ்கல்' படப் பிடிப்பில் ரேணுகா மேனனுடன் ஆடிப்பாடும் ஜெயம் ரவியிடம் 'உங்க படத்தில் நடிச்ச ஹீரோயின்கள் பற்றிச் சொல்லுங்களேன்' என்றதற்கு சதா பற்றி ரவி சொன்ன கருத்துதான் மேலே நீங்கள் படித்தது.

'அஸின் தமிழில் நன்றாகப் பேசக்கூடியவர். அதனாலேயே அவரிடம் நான் மலையாளம் பேசக் கறறுக்கொண்டேன். அவரால படப்பிடிப்பில் டென்ஷன் இல்லை. ரேணுகாமேனனும் கிட்டத்தட்ட அப்படித்தான். இந்தப் படத்தில் அவருக்குக் கொஞ்சம் சீரியசான வேடம். நடிப்பில் எங்க இரண்டு பேருக்கும் சரியான போட்டி இருக்கும்' என்ற ரவி,

மறுபடியும் ஒருமுறை, சதா பற்றிச் சொல்வதற்கு எதுவும் இல்லை என்றார்.

சதாவிடம் அப்படி என்ன எரிச்சலோ அவருககுத்தான் தெரியும்.



தகதிமிதா
அங்கிதா

# சத்யரா

சத்யராஜ் வி
விழுந்து விழுந்து ர
கிடைத்தது அவர்
'100ஆவது ந
சத்தியராஜ் நீண்ட
த்ரில்லரில் நடிக்கி
இந்தப் படத்
தார்கள். அதன்பிறகு
இதென்ன '
போது,
சத்தியராஜ் ச
டைட்டிலாக்கி இரு
சுனிதா வர்மா என்
கள். அதோடு பழை
கிறார்.

# கார்த்திக்கி

கார்த்திக் நடித்து வெளிவரவே
திரைக்கு வருவதில் சிக்கலிலுள்ளது.
குப் பின் ஒரு படத்தில் நடித்தால் அ
வேதனைப்படுகிறார் கார்த்திக்.





# சிக
# நடிச்

எ
பூரா மரக்க
ப்போறேன்
இதற்க
லிஸ் ஆகும்
வெளிப்படுத்
இப்போ

அதை பின்பற்றுவார்களோ என்ற பயம்தான் காரண
சிகரெட் பிடிக்கும் சீன்களை என் படத்தி
தவிர்க்க முயற்சிக்கிறேன் என்றார் அஜித்குமார்.

# சாயாசிங்கின் ஆவேசம்

நட்சத்திர ஹோட்டலில் ஒரு பெண் நீர்வா
மாய குளிக்கிறதை நடிகைன்னு இண்டர்நெட்டி
வெளியிட்டது அயோக்கியத்தனம. இதுபோன்ற சை
குற்றம் சம்பந்தப்பட்ட நபர்களைச் சும்மா. விட
கூடாது.

பிரபலமான ஒரு நடிகையின் முகத்தை இன்னொ
உடலுடன் பொருத்தி வெளியிட்டு இருக்கிறார்கள்

இதைச் செய்தவர்கள் வீட்டில்கூட அக்கா
- தங்கைகள் இருப்பாங்க. இதில் பாதிக்கப்பட்ட பெ
மனசு என்ன பாடுபடும். இந்த இழிவான காரியத்தை
செய்தவர்களைச் சும்மா விடக்கூடாது.

பொலிஸார் கண்டுபிடித்துக் கடுமையாக த
டிக்கணும் என்று பொரிந்து தள்ளுகிறாராம் சாயாசி

# உலகமயவாக்கலுக்கு தயாராக்கும் புதிய கல்விச் சீர்திருத்தம்

## வட - கிழக்கு பற்றிய ஒரு நோக்கு

-கே.ரீ.கணேசலிங்கம்

1

இலங்கையின் கல்வி சீர்திருத்தமென்பது காலநிலை மாற்றம் போன்றது. சுதந்திர இலங்கையிலேயே பல கல்விக் கொள்கைகள் முன்மொழியப்பட்டு அமுல்படுத்தல் முழுமைபெற முன்பு மறு கல்விசீர்திருத்தத்தை மேற்கொள்ளும் அரசாங்கங்கள் ஆட்சிக்கு வருகின்றன. இதில் வடக்கு - கிழக்கு இன முரண்பாட்டினால் தெளிவான உறவைத் தென் இலங்கையுடன் கொண்டிருக்காமையினால் அதிக பாதிப்புக்களை எதிர்நோக்கியது. இது போரினால் மேலும் விரிவடைந்ததுடன் தமிழ் - சிங்கள கல்வி உறவும் பாதிப்புக்குள்ளாகியது.

இந்நிலையில் 1997களில் அறிமுகமான புதிய கல்விசீர்திருத்தம் வடக்கு கிழக்குக்கு காலம் தாழ்த்தியே அறிமுகமானது. இப்புதிய கல்விக் கொள்கைகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் அமுல்படுத்தப்பட்ட பாணியில் இலங்கையிலும் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் வடக்கு கிழக்கில் புதிய கல்விச் சீர்த்திருத்தத்திற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்ததாக கருதமுடியாது. போர் ஒரு காரணமாகக் கூறப்பட்டு வந்தாலும் போரிற்குப் பின்பு ஏற்பட்டுளள தறகால அமைதியிலாவது முழுமையான அமுல்படுத்தலுக்கான தயார்ப்படுத்தலை அரசாங்கங்கள் செய்துள்ளதா என்பது ஆய்வுக்குரிய அம்சம்.

இலங்கையின் கல்வி பிரயோகத்தில் மத்திய அரசின் பாடசாலைகள், மாகாணசபையின் பாடசாலைகள் என இரண்டாக வகைப்படுத்திய நிர்வாகம் காணப்படுகின்றது.

குறப்பாக தேசிய பாடசாலைகள் மத்திய அரசின் கண்காணிப்பிலும் இதர பாடசாலைகள் மாகாணசபையின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குவதுடன் தனியார் பாடசாலைகளும் தனித்துவமான பங்கினை வகிக்கின்றன. வடக்கு கிழக்கில் 38 தேசியப் பாடசாலைகளும், 1941 மாகாணப் பாடசாலைகளும், 06 தனியார் பாடசாலைகளுமாக 1985 பாடசாலைகள் காணப்படுகின்றன **(Statistical information; 2004)** ஏறக்குறைய 623,843 மாணவர்கள் 2003இல் கல்வி கற்றதோடு 25,676 ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள'ன் எண்ணிக்கை காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கு பாடசாலைகளின் எண்ணிக்கையுடன் மூன்று பல்கலைக்கழகங்களும் மற்றும் இணைந்த பல்கலைக்கழகங்களும், தொழில்நுட்பக்கல்லூரிகளும், மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் பலவும் காணப்படுகின்றன. பாடசாலைகள் போன்றே பல்கலைக்கழகங்களிலும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களின் பங்கீடு மேலும் அதிகரித்துள்ளது. பாடசாலைகளில் சீர்திருத்தங்கள் போன்று பல்கலைக்கழகங்களும் தனித்துவமாக இயங்கினாலும் சீர்த்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. மேற்கு நாடுகளில் எவ்வாறு கற்பித்தல், கற்றல் அணுகுமுறைகள் காணப்படுகின்றதோ அவ்வாறே இலங்கையிலும் கற்றல் சமூகத்தை நவீனமயப்படுத்தவேண்டுமென்ற நோக்குடன் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்ட புதிய கல்வி சீர்திருத்தத்தில் மூன்று பிரதான மாற்றங்களுக்கான அடிப்படைகள் முன்வைக்கப்பட்டன.

(1) நவீனயுகத்திற்கு ஏற்ப தகவல் தொழில்நுட்பத்தை **(Information Technology)** புகுத்துதல்.

(2) செயல்முறைக்கல்வியை ஊக்குவித்து தனியார் உற்பத்திக்கான சூழலை ஏற்படுத்தல்.

(3) ஆங்கில மொழிப்பிரயோகத்தை மேலும் விரிவுபடுத்தி சர்வதேசத்தோடு இலங்கையை இணைத்தல் **(General Education Reforms:1997).**

ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் கல்வி, பல்கலைக்கல்வி என்பனவற்றில் புதிய கல்வி சீர்திருத்தம் மேற்குறிப்பிட்ட மூன்றையும் பிரதான இலக்காகக் கொண்டு செயல்பட்டது. இக்காரணிகளோடு பலவற்றை இலக்காகக் கொண்டிருந்தாலும் அவை யாவறறையும் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள் அடக்கிவிடலாம்.

**II** வடக்கு கிழக்கு மாகாணத்தின் அரசியலும் கல்வியும் வடகிழக்கு மாகாணசபையுடன் இணைந்திருந்தாலும் அதற்கான அமுலாக்கல் சிக்கல்கள் அதன் பலவீனமான அதிகாரத்தையும் பிரயோகிக்க முடியாதுவிட்டது. அதுமட்டுமன்றி தமிழர்களின் அரசியல் வாழ்வை, கல்வியை சிதைப்பதனால் மாற்றியமைக்கலாமென ஆய்வாளர்கள் கருதினர். இதனால் அரசியல்போக்கு கல்வியின் தாக்கங்களையும் அடிப்படைகளையும் வலுவூட்டியது. இலங்கை அரசாங்கம் இன வேறுபாடுகளிலான நெருக்கடிகளை சிங்கள மக்களில் ஏற்படப்போகும் ஆபத்துக்கள் எனக்கருதி கல்வியை ஒடுக்கியது. சமகாலத்தில் ஆங்கிலத்தை தமிழர்கள் அதிகமாகக் கற்றதனால் ஏற்பட்ட விளைவுகளையும் சிங்கள அரசியல் தலைவர்கள் தவறாகவும் தமது இனத்திற்கு எதிரானதெனவுமே கருதிச் செயல்பட்டனர். தமிழர்களின் கல்வித்தரத்திலான போட்டியை இனப்பகைக்கான போட்டியாக மாற்றி தமிழர்களுக்குரித்தான திறமைகளை முறியடித்தனர். **(Base line study on the primary in service- system in the North - East province:2000).**

அரசியல் ரீதியில் சிங்கள தலைமை கள் தமிழர்களின் கல்விக்கு எதிராக சட்டரீதியில் தடைகளை ஏற்படுத்தி இளம் சமுதாயத்தினரை விரக்தியுடையவர்களாக மாற்றினர். உயர்கல்விக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டதுடன் வேலைவாய்ப்புக்கள் சாத்தியமற்றதாகியது. இது வட- கிழக்கு அரசியல் ஆயுதப் போராட்ட அரசியல் கலாசாரத்துக்கு வித்தட்டது. இவ் ஆயுதப் போராட்டம் அரசியல் ரீதியாக போர்கள் ஏற்படுவதற்குக் காரணமாகியது. வடக்கு கிழக்கு மீது தென் இலங்கையும், இந்தியாவும் பல தடவை பல யுத்தங்களை பிரகடனப்படுத்தி அதிகார அரசியலை அமுல்படுத்த முயன்றது. இதனால் வட- கிழக்குப் பிரதேசம் முழுவதும் இடம்பெயர்வு தவிர்க்க முடியாத அரசியல் காரணியாகியது **(Ibid:2000).**

இடப்பெயர்வினால் கல்விக்கான வாய்ப்புக்களின்மை, சுகாதார வசதிகளற்ற நிலை, போசாக்கில்லாத உணவுப் பழக்கம், பாடசாலைகள் மூடப்பட்ட நிலைமை என பல காரணிகள் கல்வி நோக்கிய மாணவர்களின் சூழலைப் பாதித்தது. வடக்கு கிழக்கில் போரால் முற்றாகவே மூடப்பட்ட பாடசாலைகளின் விபரம் வருமாறு,

| மாவட்டம் | இயங்கும் பாடசாலைகள | மூடப்பட்ட பாடசாலைகள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 410 | 75 |
| கிளிநொச்சி | 89 | 03 |
| முல்லைத்தீவு | 94 | 12 |
| வவுனியா | 181 | 12 |
| மன்னார் | 94 | 21 |
| திருகோணமலை | 244 | 24 |
| மட்டக்களப்பு | 308 | 14 |
| அம்பாறை | 398 | 04 |

**(Source : School Census.1999)**

யாழ். குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற இராணுவப் பயன்பாட்டுடன் உட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலைகள் பல தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. அவற்றின் முழுமையான விபரம் பின்வருமாறு,

| உயர்பாதுகாப்பு வலயம் | பாதிக்கப்பட்ட பாடசாலைகள் |
|---|---|
| நிலக்காடு | 04 |
| ஊருண்டி | 01 |
| மண்டைதீவு | 02 |
| கிழக்கு அரியாலை | 14 |
| தனங்கிளப்பு | 02 |
| எழுதுமட்டுவாழ் | 11 |
| அம்பன் | 18 |
| பல்லம்பை | 01 |
| பருத்தித்துறை | 07 |
| தெல்லிப்பழை | 02 |
| அராலி | 18 |
| மொத்தம் | 80 |

**(Source : Statisical hand Book - Jaffna 1999)**

எனவே வடக்கு -கிழக்குப் பிரதேசம் விசேடமான பிரச்சினைகளைக் கொண்ட பிரதேசமாக விளங்குகின்றது.

இலங்கையின ஏனைய பாகங்களுடன் ஒப்பிடும்போது, பாடசாலை, பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உயர்கல்விக்கான வாய்ப்புகள் பெருமளவில் கிடைக்காமல் போகின்றது. பௌதீக வளங்களின்மை, கல்விக்கான சுற்றுசூழலின்மை, உள் கட்டமைப்பு முறைகளில் சமமான போதிய வளர்ச்சியின்மை, கலைத்திட்டங்களில் காண்படும் முரண்பாடுகள் (வரலாறும் சமூகக்கல்வியும்) என்பன கல்வியில் அதிகளவான பாதிப்பை எற்படுத்துகின்றது. இவையாவற்றுக்கும் அரசியல் ரீதியான முரண்பாடே முக்கிய காரணியாக உள்ளது.

புதிய கல்விக் கொள்கைகளின் அமுலாக்கத்தைப் பாதிக்கும் பிரதான விடயமாக இனப்பகைமை விளங்குகிறது. இது அரசியல் ரீதியில் தமிழர் - சிங்களவர் என்ற விரோதமான போக்கு கல்வியில் பாதிப்'னை ஏற்படுத்துவதாக விளங்குகின்றது. அரசியல் ரீதியான பகைமைத் தணிவுக்காலமாகிய கடந்த மூன்று வருடங்கள் புதிய கல்விசீர்திருத்தத்தின் அமுலாக்கம் பூரணமான நிறைவைப் பெறமுடியாதுள்ளது. காரணம் இனரீதியாக வளர்ந்த பகைமைத்தன்மையை அரசாங்கத்தால் முறியடிக்க முடியாதுள்ளது.

குறிப்பாக வடகிழக்குப் பிரதேசங்களில் அரசசார் பற்ற நிறுவனங்களே அதிகளவான நிதியினை நிரந்தரமான கட்டுமானத்துக்கு ஒதுக்காது விடுத்தாலும் ஓரளவேனும் சாத்தியப்பாடுடைய நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி சூழலை சீர்படுத்தி வருகின்றது **(Ibid: 2000).** அதனை தவிர்த்து அரசாங்கத்தின் கல்வி அமைச்சு, மாகாணசபைக்கான கல்வி அமைச்சு என்பன மேற்கொள்ளும் நிதி ஒதுக்கங்கள் பகிர்ந்தளிப்புக்களின் தன்மைகள் முரண்பாடானதாக காணப்படுகின்றது. மாகாணசபையின் கல்வி அமைச்சின் அதிகாரம் எல்லைப்படுத்தப்படடிருபபதனால் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் கல்வி நடவடிக்கைகள் முழுமையான வளர்ச்சியை அடையமுடியாதுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தின் கல்வி அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு பதிலாக சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களும் அவற்றின் ஒத்துழைப்போடு இயங்கும் உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்களுமே கணிசமான பணிகளை ஆற்றிவருகின்றன. இதுவே இன்றைய கல்விக் கொள்கையின் போக்கை நிர்ணயிக்கின்றதாக அமைகின்றது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படும் கல்விக்கொள்கைகளை இலங்கை போன்ற வறிய நாடுகளில் அமுல்படுத்த முயலும்போது போதிய வசதி வாய்ப்புக்களையும், சூழலையும் உருவாக்குகின்ற அமைப்புக்களாக அரச சார்பற்ற நிறுவனங்கள் காணப்படுகின்றன. அத்தகைய அமைப்புக்கள் தமது அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கொள்கைகளுக்கு ஏற்பவே பணிபுரிந்துகொ[illegible]டு அத்தகைய நாடுகளுக்கு சேவை புரியக்கூடிய பிரிவினரைத் தயார் செய்கின்ற சூழலை மேற்கொள்கின்ற நோக்குடனேயே செயல்படுகின்றன **(Baseline study on the primary in service, system in the North East Province: 2002).**

இதனால் மேற்கு நாடுகளின் கொள்கைகளுக்கு ஏற்ப வறிய நாடுகளின் மனிதவளத்தினை தயார் செய்வதுடன் மேற்கு நாடுகளின் வளங்களை பிரயோகப்படுத்தும் மாதிரிகளைத் தயார்செய்யவும் சந்தர்ப்பம் அளிக்கின்றது. இது முழு இலங்கையையும் மேற்குக்கு சார்புடையதாக மாற்றுவதாகவே உள்ளது.

புதிய கல்வி சீர்திருத்தத்தில முதன்மைப்படடிருககும் கல்விக் கொள்கையானது மீளவும ஆங்கிலக் கல்வியை அமுலாக்க முனைவதுடன், தகவல் தொடர்பாடலையும், தனியார் பொருளாதாரத்தையும் கட்டிவளர்க்க முயன்று வருகின்றமையின் உள்நோக்கத்தை புரிந்துகொள்ள முடிகின்றது.

இதிலிருந்து வடக்கு - கிழக்கும் விதிவிலக்காக செயல்படமுடியாதநிலை ஏற்பட்டது. வடக்கு கிழக்கு போர்காலத்தில் தெற்கோடு ஒப்பிடும்போது பின்தங்கியிருக்கின்றதென்ற வாதம் எல்லாத்துறைகளிலும் பேசப்பட்டாலும் உலகமயவாக்கலுக்கான பங்களிப்பில் தெற்கைவிட வடக்கு கிழக்கு குறைந்த நிலையிலேயே ஒத்துழைத்திருக்கிறது என்பதே அந்த வாதத்தின் சரியாக கருத்துருவாக்கமாகும்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## யானை!



யானைகளுக்கு வியர்வைச் சுரப்பிகள் கடையாது. உடல் வெப்பத்தைக் குறைப்பதற்கு தங்கள் காதுகளால் விசிறிக்கொள்கிறது.

யானையின் கர்ப்பகாலம் 22 மாதங்கள்.

யானையின் ஓட்ட வேகம் மணிக்கு 40 கிலோமீற்றர். யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை. யானையால் தன் துதிக்கைக்குள் ஒன்றரைக் கலன தண்ணீரை உறிஞ்சி வைத்துக்கொள்ளமுடியும்.

யானை 3மைல் தொலைவில் தண்ணீர் இருப்பதைக் கூட உணர்ந்துகொள்ளும் சக்தி கொண்டது. யானையின் துதிக்கை அதன் வாழ்நாள் முழுவதும் வளர்ந்து கொண்டேயிருக்கும். யானையின் வாழ்நாளில் அதற்கு 6முறைகள் பற்கள் விழுந்து முளைக்கும்.

கறுப்புத் தந்தமுள்ள யானைகள் ஆபிரிக்காவில் உள்ளன. அதிக எடை உள்ள நிலவாழ் பாலூட்டி ஆபிரிக்க யானை தான்.

வெள்ளை யானைகளின் நாடு என அழைக்கப்படுவது தாய்லாந்து.

## விடுகதைகள்

1. அண்ணன் தம்பி இருவர் அவர்களைச் சுற்றி பன்னிருவர் அவர்கள் யார்?
2. எவ்வளவுதான் அடித்தாலும் சரி, உதைத்தாலும் சரி அழவேமாட்டான் அவன் யார்?
3. அனலில் பிறந்து ஆகாயத்தில் மறைவாள் அவள் யார்?
4. பச்சைக் கோழி முட்டையிலிருந்து வெள்ளைக் குஞ்சு பொரித்தது அது என்ன?
5. கல்லிலே காய்க்கும் பூ தண்ணீரிலே மலரும் பூ அது என்ன?

T.சோபிகா, வரணி.


## நிறந்தீட்டுவோம் வாருங்கள்!

அன்புக் குழந்தைகளே!

விதம் விதமாக வர்ணம் தீட்ட உங்களுக்கு ஆசை தானே! இதோ இங்கே தரப்பட்டிருக்கும் படத்திற்கு வர்ணம் தீட்டி மகிழுங்கள்.




## ஆட்டுக்குட்டி!




செல்லமாக நான் வளர்க்கும்
சின்னஞ்சிறிய ஆட்டுக்குட்டி
புல்லை மேய்ந்து பால்குடிக்கும்
புள்ளிமேனி ஆட்டுக்குட்டி

குட்டிச் சுவரின் மீதில் ஏறிக்
குதித்துத் துள்ளும் ஆட்டுக்குட்டி
முட்டிச் செப்புள் தலையைவிட்டு
மூச்சுத் திணறும் ஆட்டுக்குட்டி



வாழைப்பழமும் தோலும் எனது
கையால் வாங்கித் தின்னும் குட்டி
கூழைப் போலும் கழி நீர்க் கஞ்சி
குடித்துச் சீறும் ஆட்டுக்குட்டி!

பிள்ளை போன்று நான்வளர்க்கப்
பெருத்து வளரும் ஆட்டுக்குட்டி
கொள்ள விலைக்கு யாரும் வந்தால்.
கொடுக்கவிடவே மாட்டேன் அம்மா!



ச. வே. பஞ்சாட்சரம்

பிறரைப்பற்றி - அது புகழ்ச்சியாக இருந்தாலும் - எவ்வளவு குறைவாகப் பேசுகிறோமோ அவ்வளவிற்கு நல்லதேயாகும். - அரவிந்தன்

கட்டாயப்படுத்திப் புகுத்தப்படும் அறிவு மனதில் பதியாது. - பிளேட்டோ

## பொது அறிவு

1. சீனப் பெருஞ்சுவரைக் கட்டிய மன்னன் யார்?
2. உலக சாதனை பல நிகழ்த்தி கின்னஸ் புத்தகத்தில் இடத்தைப் பெற்றவர் யார்?
3. ஆங்கில அகராதியை முதன் முதல் தொகுத்தவர் யார்?
4. உலகிலேயே தேர்தல்மூலம் அந்நாட்டு மக்களின் 100% வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி யார்?
5. உலகில் இறுதியாக சுதந்திரம் பெற்ற நாடு எது?
6. மனிதனால் இன்னும் செய்மதி அனுப்பப்படாத கோள் எது?
7. முதன் முதலாக விண்ணுக்குச் செய்மதியை அனுப்பிய நாடு எது?

து.சிந்துஜன்,
யாழ்ப்பாணம்.

## பொய்யா புளுகி!

பொன்னேரி என்ற கிராமத்தில் பொழிலன் என்ற பொய்யன், இடி இடிக்குது என்றால் வானில் ஒரு திருவிழாவே நடந்துவிட்டது என்று கதை விடுபவன். அவனை எல்லாரும் புரட்டன் என்றே அழைப்பர்.

ஒருநாள் புரட்டன் வெளியூர் சென்றான். ஒரு மரத்தடியில் அமர்ந்தான். அங்கே ஒரு மனிதன் வந்தமர்ந்தான். சிறிது நேரம் புரட்டன் பேசாமல் இருந்தான். பிறகு,

"அய்யா! சற்று நேரத்திற்கு முன்பாக அந்தப் புதருக்கு அருகில் நான் ஒரு ஆயிரம் தலைப் பாம்பைப பார்த்தேன். பயத்தில் என் உடம்பெல்லாம் சில்லிட்டுப் போனது" என்றான்.

வழிப்போக்கன் மெதுவாகத் திரும்பி அவன் குறிப்பிட்ட புதரைப் பார்த்தான். பின் மீண்டும் புரட்டனிடம் திரும்பி,


"ஏனப்பா! ஆயிரம் என்றால் கொஞ்சம் என்று நினைத்தாயா? இரண்டு ஐந்நூறு சேர்ந்ததல்லவா ஆயிரம் ஆகவேண்டும்?" என்று கேட்டான்.

உடனே புரட்டன் "அப்படியானால் நான் புதரில் பார்த்தது ஐந்நூறு தலைப் பாம்புதான் போலிருக்கிறது. அடேயப்பா எவ்வளவு பெரியது!" என்று மலைப்பது போல் நடித்தான்.

அதைக்கேட்ட வழிப்போக்கன், "ஐந்நூறு தலைப் பாம்பு எங்காவது உண்டா? ஐந்நூறு தலையுள்ள பாம்பு என்றால் அதன் உடல் எவ்வளவு பருமனாக இருக்கவேண்டும்? அது நுழைந்து ஒளிந்து கொள்ள எவ்வளவு பெரிய புற்று இருக்கவேண்டும்?" என்று கேட்டான்.

புரட்டன் லேசாக நெளிந்தபடி, "அடடா! சரியாக நான் பார்த்திருக்கமாட்டேன் போலிருக்கிறது. நான் பார்த்தது நூறுதலைப் பாம்பாகத்தான் இருக்கும். நிறையத் தலைகளைப் பார்த்ததும் பயத்தில் தவறாகக் கணக்குப் போட்டுவிட்டேன் என்று நினைக்கிறேன்" என்றான்.

வழிப்போக்கனும் விடவில்லை. "அது மட்டுமென்ன சாமானியமா? நூறு தலைப் பாமபைப் பற்றி ஆயிரம் காலத்திற்கு முன்பு எழுதப்பட்ட புத்தகங்களில் கூட குறிப்பு இல்லையே!" என்றான்.



புரட்டன் மெல்லப் பின் வாங்கி "இருக்கும். புத்தகம் எங்காவது பொய் கூறுமா? நான் ஐம்பதுதலைப் பாம்பைததான் பார்த்திருப்பேன்" என்று கூறியபடி மெல்ல எழுந்தான்.

"உட்காருங்கள். ஆதிசேடனுக்கே ஐந்து தலைகள் தான இருந்ததாக புராணம் சொலகிறது. அப்படியிருக்க ஐம்பது தலைப்பாம்பை நீங்கள் பார்த்தது வியப்பில்லையா?" என்று கேட்டான்.

புரட்டன் வெலவெலத்தான். என்றாலும் பிறவிக் குணம் போகுமா? "சரிதான் நான் பார்த்தது ஐந்து தலை ஆதிசேடன் பாம்பாகத்தான் இருக்கும்" என்றான். வழிப்போக்கன் விடவில்லை.

"ஆதிசேடன் நாகலோகத்தில் அல்லவா இருக்கிறது. அது எப்படி பூலோகத்திற்கு அதுவும் இந்தப் புதருக்கு வந்தது?" என்று கேட்டான்.

புரட்டனுக்கு இவனிடம் நம் புரட்டல்கள் செல்லாது என்று தோன்றிவிட்டது. எனவே "ஏன் அண்ணே, அந்த சருகு செத்தைக்கு அருகில் ஏதோ சலசலவென்று கொஞ்ச நேரத்திற்கு முன்னால் ஒரு சத்தம் கேட்டது. பாம்பாக இல்லாவிட்டால் வேறு என்னவாக இருக்கும்?" என்று மெல்லக் கேட்டான்.

உடனே வழிப்போக்கன் புரட்டனை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டான். "செத்தையில் கேட்ட சலசலவென்ற சத்தத்தை வைத்துகொண்டு அங்கு ஆயிரம் தலைப்பாம்பே இருந்ததாகவும், நீ பார்த்துப் பயந்ததாகவும் கூறிவிட்டாயே... உன்னையெல்லாம் சும்மாவிட்டால் ஊரெங்கும் புரளியைக் கிளப்பி ஊரையே நாசமாக்கி விடுவாய்" என்று கூறி தரும அடிகொடுத்தான்.

"அய்யோ அடிக்காதீங் கண்ணே! நான் இப்படிப் பொய் கூறியபோது உங்களைப் போல யாருமே கேள்வி கேட்டு தெளிவுபெறாமல் நான சொல்வதை அப்படியே நம்பினார்கள். அதனால்தான் இப்படி தொடர்ந்து பொய் பேசி வந்தேன். இனி அந்தத் தப்பைச் செய்யமாட்டேன். எனனை விட்டுவிடுங்கள்" என்று கூறியபடி தலைதெறிக்க ஓடினான்.

குழந்தைகளே!

இந்த உலகில் புரட்டனைப் போல பலர் உள்ளனர். உங்கள் அறிவான பேச்சுத் திறனாலும், புத்திசாலித்தனத்தாலும் அவர்களை இனம்கண்டுபடியுங்கள். அப்போதுதான உண்மை என்னவென்று தெளிவாகும்.

தொகுப்பு: S. வனிதா

### விடைகள்

#### விடுகதைகள்

1. கடிகாரம் 2. பந்து 3. புகை 4. பஞ்சு 5. சுண்ணாம்பு

#### பொது அறிவு

1. ரிசன் ஷி 2. ஆழிக்குமரன் ஆனந்தன் 3. சோரட்டதேரர் 4. ஈராக் - சதாம் ஹுசைன் 5. கிழக்கு திமோர் - இந்தோனேஷியாவிடமிருந்து 6. புளுட்டோ 7. ரஷ்யா

# சத்யராஜ் நடிக்கும் '6.2'


சத்யராஜ் வில்லனாக் நடித்தாலே அலம்பலாக இருக்கும். ரசிகர்களும் விழுந்து விழுந்து ரசிப்பார்கள். 'தகடு தகடு' போன்ற புகழ்பெற்ற முத்திரை கிடைத்தது அவர் வில்லனாக நடித்தபோதுதான்.

'100ஆவது நாள்', '24 மணிநேரம்' போன்ற திகில் படங்களில் கலக்கிய சத்தியராஜ் நீண்ட இடைவேளைக்குப் பிறகு அதேபாணியில் ஒரு கிரைம் த்ரில்லரில் நடிக்கிறார்.

இந்தப் படத்திற்கு முதலில் 'மாறுவேஷம' எனப் பெயர் சூட்டியிருந் தார்கள். அதன்பிறகு '6.2' எனப் புதுமையாக டைட்டில வைத்திருக்கிறார்கள்.

இதென்ன '6.2' என புதுமுக டைரக்டர் வி.செந்தில்குமாரிடம் கேட்ட போது,

சத்தியராஜ் சாரோட உயரம் ஆறு அடி இரண்டு அங்குலம். அதையே டைட்டிலாக்கி இருக்கிறோம் என்றார். படத்தில் சத்தியராஜுக்கு ஜோடியாக சுனிதா வர்மா என்ற நடிகையை இறக்குமதி செய்திருப்பதாகச் சொல்கிறார் கள். அதோடு பழைய ஹீரோ ரவீந்தர் இந்தப் படத்தில் வில்லனாக நடிக் கிறார்.



அது ஒரு கனா காலம்
தனுஷ்-ப்ரியாமணி

## கார்த்திக்கின் வேதனை

...டித்து வெளிவரவேண்டிய 'மனதில்' படம், ... சிக்கலிலுள்ளது. நீண்ட இடைவெளிக் ...தில் நடித்தால் அதுவும் இப்படியா? என ... கார்த்திக்.

காதல்கோட்டைக்குப் பிறகு மீண்டும் தேவயானி யைக் ஹீரோயினாக்கி ஒரு படத்தை இயக்குகிறார் அகத்தியன்!

## 'கிளு கிளு' போட்டி

'கிளு கிளு' என்ற படத்தின் தலைப்பைப் பார்த்தாலே படத்தில் எவ்வளவு கவர்ச்சியிருக்கும என்று யூகித்துக்கொள்ளுங்கள்.

தலைப்பைப் பார்த்தவுடன் தியேட்டருக்கு வரிந்துகட்டும் ரசிகர்களைத் திருப்திப்படுத்தி அனுப்ப வேண்டும் என்பதற்காக அபிநயஸ்ரீயும், பாபிலோனாவும போட்டி போட்டுக் கவர்ச்சி காட்டுகிறார்களாம். இரண்டு கவர்ச்சி மேகங்கள் முட்டி மோதுவதால் ரசிகர்கள் தியேட்டரில் கவர்ச்சி மழையில் நனையப்போவது உறுதி.




அடைக்கலம்
பிரசாந்த்-உமா

## நடிகையின் கண்டிஷன்

'காதலே என் காதல்' படத்தில ஹீரோயினாக அறி முகமாகும் ஷுருதா, தயாரிப் பாளரிடம் கண்டிஷன் போட்டி ருக்கிறாராம்.

படத்தில் ஹீரோ தன்னைத் தொடாமல நடிக்கவேண்டும். கவர்ச்சிக் காட்சிகள் எதுவும் இருக்கக்கூடாது என்பதுதான் அந்தக் கண்டிஷன்.



சச்சின்
விஜய்-பிபாஷாபாசு



# சிகரெட் குடிப்பது மாதிரி நடிக்க வருத்தமா இருக்கு - அஜித்

என் ரசிகர் மன்றத்தை நற்பணி இயக்கமா மாத்திட்டேன். தமிழகம் பூரா மரக்கன்றுகள் நட விரும்புகிறேன். ரசிகர்களை இந்தப் பணியில் ஈடு படுத் தப்போறேன்.

இதற்காக நானே மரக்கன்று நட தொடங்கி வச்சேன். என் படங்கள் ரிலீஸ் ஆகும்போது ரசிகர்கள் கட் – அவுட், பால் அபிஷேகம் என அன்பை வெளிப்படுத்துறாங்க. அப்படியெல்லாம் செய்யாமல் மரக்கன்றுகள் நடணும்.

இப்போது சிகரெட் குடிப்பது மாதிரி நடிக்க வருத்தமா இருக்கு. ரசிகர்கள் ...பயம்தான் காரணம். ...ளை என் படத்தில் ... அஜித்குமார்.


## சினிமாச் சிதறல்

## ஆவேசம்

...ரு பெண் நிர்வாண ... இண்டர்நெட்டில் ... இதுபோன்ற சைபர் ...ச் சும்மா விடக் ...


...கத்தை இன்னொரு ... இருக்கிறார்கள். ...டில்கூட அக்காள் ...திக்கப்பட்ட பெண் ...வான காரியத்தைச் ...டாது.

... கடுமையாக தண் ...றாராம் சாயாசிங்.



நீயே நிஜம்
சுமேஷ்-தேஜாஸ்ரீ

# காதல் திருமணம் வேண்டாம் -சதா



காதல் திருமணத்தில் நம்பிக்கை இல்லை. பெற் றொருக்கு நான் ஒரே பெண்.

அம்மா, அப்பா பார்க் கிற மாப்பிள்ளையைக் கட் டிக் கிட்டாதான் பிரச்சினை இருக்காது.


அவர்கள் பார்க்கிற வரைத்தான் திருமணம் செய்துக்குவேன். காதல் திருமணத்தில் நிறையப் பிரச்சினை இருக்கு. பெற்றோர் ஆசியும், ஆதரவும் இருந்தால்தான் இல்வாழ்க்கை நன்றாக இருக்கும்.

திருமணத்தில் அவர்கள விருப்பம்தான் முக்கியம் என் கிறாராம் சதா.

மாயாவி படத்திற்காக ஒட்டு மீசை வைத்திருக் கிறாராம் சூர்யா. பொது இடங்களுக்கு வரும்போது மீசையை வரைந்துகொண்டு வருகிறாராம்.

# தூய்மை நிறைந்த உள்ளம் இறைவன் வாழும் இல்லம்

விருப்பு வெறுப்பு என்பது எமது சிந்தனையை அடிப்படையாகக் கொண்டே காணப்படுகின்றது.



எமது விருப்பு வெறுப்புக்களை ஊட்டுகின்ற ஒன்றாக பொழுது போக்கு மையமாக இன்று சினிமா, சின்னத்திரை என்பன காணப் படுகின்றது.

இவற்றில் காட்டப்படுகின்ற நடத்தைகளையே நாம் இன்று கடைப்பிடிக்கின்றோம். நடை உடை, பாவனை, பேச்சு என்பன எம் மத்தியில் தீர்மானிப்பது பொழுதுபோக்கு மையங்களாகிய திரைப்படமும், சின்னத்திரையும் ஆகும்.

இதில் நெருங்கிப் பழகும் தன்மைகள் பாலியலை தூண்டுகின்ற வகையிலே அமைந்துள்ளது. அத்துடன் உடை உடுத்துவது, ஆடுவது, பாடுவது எல்லாமே பாலியல் தூண்டலாகவே அமைகின்றது. கிளர்ச்சியூட்டும் இசை போன்றனவும் தாராளமாய் காணப்படுகின்றது. இங்கு பாச உணர்வுகளுக்கும், பரஸ்பர மதிப்புக்கும் இடம் கிடையாது. இவற்றை எமக்கு பொழுது போக்கு ஊடகம் வழங்கவில்லை. மாறாக எமது சமூகப்பாலியலைத் தூண்டும் ஓர் ஊடகத்தின ஊடாகவே பொழுதைக் கழிக்கின்றனர்.

இத்தகைய பாலியல் தூண்டலை பார்ப்பதினால் எமது சிந்தனையும் பாலியல் சார்ந்தே

## பரமபிதா காட்டிய பாதை

நகர்கின்றது. பாலியல் சார்ந்த கதைகளும், அசிங்கமான உடைகளை உடுத்துவோம் இதன் ஓர் வெளிப்பாடு ஆகும்.

இன்று இளைஞர்கள் மத்தியில் இழிவான பாலியல் சார்ந்த கதைகள் கதைக்காதவர்களையும், புதிய நாகரீகம் என்ற போர்வையில் அணியும் அசிங்க ஆடைகளை விரும்பாதவர்களும. சக நண்பர்களினால் ஒதுக்கப்படுகின்றார்கள். கேலி செய்து 'ரீல்வைற்' என்று அழைக்கப்படுகின்றார்கள்.

இதனால் சக நண்பர்களின் கேலிக்கு பயந்து பாலியல் சார்ந்த செயற்பாடுகளில் இறங்குபவர்கள் அதிகம். இதன் மூலம தாங்கள் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிருபிக்கும் ஓர் இழிதகமைச் செயல்களைச் சாதனை என்று நினைக்கின்றார்கள்.

தீமைகளை வருமுன்னே காப்பது நல்லது, வந்தபின்பு அதனைகுறித்து கவலை கொள்வதினால் எவ்விதபயனும் இல்லை. ஆகவே பாலியல் உணர்வு முதன் முதலில் எப்படி இருக்கும் என்று பரிசோதிக்கவும், குடிபோதையில் இருந்து சந்தர்ப்பவசத்தில் மாண்டு போனவர்களும் பின்னர் கவலை கொள்ளுகின்றனர்.

எதையும் வருமுன் நிதானமாகச சிந்தித்து செயற்பட வேண்டும். எமது உடல் தூய்மையானது அதனை கெடுக்கக்கூடாது. இறைவன் தங்கும் இல்லம் அது. இதனைத்தான் புனித பவுல் கூறுகின்றார். ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் அவருடன் உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார்.

எனவே பரத்தைமையை விட்டு விலகுங்கள் மனிதர் செய்யும் எப்பாவமும் உடலுக்குப் புறம்பானது. ஆனால் பரத்தைமையில் ஈடுபடுவோர் தம் சொந்த உடலுக்கு எதிராகவே பாவம்

**வி.பி.தனா**
**அரியாலை**

செய்கின்றனர். உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட தூயஆவி தங்கும் கோவில் என்று தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே, உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள்.

(1கொரி 6:17-20)

# ஏலத்தில் விற்கப்பட்ட சைக்கிள்கள் மீண்டும் பொலிஸாரிடம் சிக்கியது

(துன்னாலை)

பருத்தித்துறை நீதிமன்றினால் பல்வேறு சம்பவங்களின் போது பிடிபட்டு அரசுடமையாக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்பட்ட சைக்கிள்கள் பல மீண்டும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

குறித்த சைக்கிள்களைக் குறைந்த விலையில் சில குழுவினர் வாங்கி சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

சட்ட விரோதமான முறையில் சவுக்கு விறகுகளை ஏற்றி விற்றல், மணல் மண் அகழ்ந்து விற்றல் போன்ற நடவடிக்கைகளில் இச் சைக்கிள்கள் பயன்படுத்தப்பட்டு வந்தன.

சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வில் பயன்படுத்தும் வாகனங்கள் பல நீதிமன்றில் வைக்கப்பட்டுள்ள நிலையில் நூற்றுக்கணக்கானோர் சைக்கிள்களில் மணல் மண்ணை அகழ்ந்து விற்றுவருகின்றனர்.

இந் நிலையில் பொது மக்கள் சிலர் கொடுத்த தகவலின் படி பொலிஸாரால் சிலர் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். சிலர் சைக்கிள்களை விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சைக்கிள்களில் பெருபாலானவை நீதிமன்றில் ஏலத்தில் வாங்கப்பட்டவை என்பது தெரியவந்துள்ளது. ஆயினும் குறித்த சைக்கிள்கள் வாங்கிய பெறுமதி குறைவாகையால் அதனைப் பொருட்படுத்தாது மீண்டும் மண் அகழ்வு நடவடிக்கைகளில் இரவு பகலாக குறிப்பிட்ட நபர்கள் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. (க-101)

# அங்கவீனர்களின் நலன் கருதி வீடுகள் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

கடற்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடமைப்பு தொகுதிகளை அமைக்கும் போது அங்கவீனர்களின் நலன் குறித்து வீசேட கவனம் செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இந்த வீடுகளை அமைக்கும் திட்டத்திற்கான வழி வகைகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

அங்கவீனர்கள் மேல் மாடிகளுக்கு செல்லக்கூடிய வழி வகைகளை அமைத்தல், வேறு ஊனங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படக்கூடிய உதவிகள் என்பன குறித்து ஆராயப்படுவதாக சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், கழிவறை வசதி, கழிவுப் பொருட்கள் கொட்டுவது தொடர்பாக ஆராயப்பட்ட பின்னரே வீடமைப்புத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென சமூக நலன்புரி அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது. (க-9)



**சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளினுடைய செய்மதிப் படங்களை இந்திய உயர்ஸ்தானிகர் நிருமாராவ் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் அண்மையில் கையளித்தனர்.**

## நேர்முகப் பரீட்சை

(பொன்னாலை)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் உள்ளூராட்சித் திணைக்கள நூலகப் பொறுப்பாளர்கள் தரம்-IIIக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழை நடைபெறவுள்ளது.

இந்நேர்முகப் பரீட்சை வடக்கு-கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-49)

# செய்தித் துளிகள்

## கிராம சேவகரின் வீட்டிற்கு கைக் குண்டு வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கிராமசேவையாளர் ஒருவரின் வீட்டிற்கு நேற்று முன்தினம் அதிகாலை இனந் தெரியாதோரால் கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வைண்டின்ஸ் வீதியில் உள்ள கிராம சேவையாளரினுடைய வீட்டின் மீதே இக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இக் குண்டுத் தாக்குதலினால் வீட்டிற்கு சிறு சேதம் ஏற்பட்டது. இத் தாக்குதலுக்கான காரணமெதுவும் கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## நிர்வாகிகள் தெரிவு

(பொன்னாலை)

தென்மராட்சி சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக சி.கணேசரட்ணமும் செயலாளராக சி.கதிர்காமநாதனும் பொருளாளராக எஸ். ஆலோசியஸும் தெரிவுசெய்யப்பட்டனர்.

உபதலைவராக ராஜூவ்வும் உபசெயலாளராக க.மகேந்திரனும் ஆலோசகராக எஸ்.ஜெயராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர். (க-49)

## பரீட்சை

(பொன்னாலை)

கொடிகாமத்தில் நடாத்தப்பட்ட தையல், மனையியல் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றிய யுவதிகளுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் கெடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியை தென்மராட்சிப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவு மகளிர் அபிவிருத்திப் பிரிவினர் நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-49)

## குடிநீர் விநியோகம் சீரில்லை

(பொன்னாலை)

வடமராட்சி-வடக்குப் பகுதியிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்நிலையங்களில் தங்கியிருக்கும் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையங்களுக்கான நீர் விநியோக நடவடிக்கைகளை தற்போது அப்பகுதி உளளூராட்சி சபைகளே வழங்கி வருகின்றன.

இந்நிலையங்களுக்கான குடிநீர் சேவையை ஆரம்பத்தில் கடற்றொழிலாளர் சம்மேளனமே மேற்கொண்டு இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (க-49)

## பஜனை வழிபாடு

(கொழும்புத்துறை)

சுனாமயால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவில் திருமறைக் கலாமன்றத்தினர் 41 நாளான கடந்த வெள்ளிக்கிழமை விசேட பஜனை வழிபாடு ஒன்றினை மணற்குடியிருப்பு சம்மேதுருவானோர் ஆலயத்தில் நடத்தினர்.

கடற் கொந்தளிப்பு மத்தியிலும் கோவில் முன் மண்டபத்தில் 40ற்கும் மேற்பட்ட கலைஞர்கள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையினை மதவேறுபாடின்றி பொது வழிபாடாக நடாத்தினர்.

அத்துடன், முள்ளியவளை வித்தியானந்தா மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுடன் உள ஆற்றுப்படுத்தல் சம்பந்தமான கலந்துரையாடலினையும் நடாத்தினர். (க-51)

## ஆங்கில வள நிலையத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பின் நிர்வாகத்தின் கீழ் இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் நிதியத்தின் இலவச ஆங்கில வள நிலையமும் கல்விக் கூடமும் இன்று பிற்பகல் 3.30மணிக்கு கஸ்தூரியார் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பயிற்சி நிலைய ஆலோசகர் சி.கிருஸ்ணகுமார் தலைமையில நடைபெறும் இந் நிகழ்வில் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றோபேட் ஈவன்ஸ், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, லண்டன் ஸ்ரீ கனக துர்கை அம்மன் நிதியத்தைச் சேர்ந்த எஸ்.நவரட்ணம், எஸ். ஸ்கந்ததேவா மற்றும் தமிழ் தகவல் தொழிநுட்ப ஒருங்மைப் புத் தலைவர் ரி.ரவிசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளன. (ச)

## வீதி சேதம்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை- காரைநகர் வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது.

இதனால் இவ் வீதியூடான போக்கு வரத்துக்கள் மிகச் சிரமத்தின் மத்தியிலேயே நடைபெற்று வருகின்றன.

கடந்த 7 வருடங்களுக்கு மேலாக இவ்வீதி திருத்தப்படாதிருப்பதால் இவ்வீதியால் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ் வீதியை உடன் திருதத நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொது மக்கள் கேட்டுள்ளனர். (க-49)

★ ★ ★

(பொன்னாலை)

மாவடி - மூளாய் பிரதான வீதியில் காளிகோவிலுக்கும் - கள்ளுத் தவறணைக்கும் இடையில் அமைந்துள்ள மதகு ஒன்றில் மூன்று குழிகள் ஏற்பட்டிருப்பதுடன் வீதியும் சேதமடைந்துள்ளது.

இதனால் மேற்படி வீதியால் போக்குவரத்து செய்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வடபிராந்திய போக்குவரத்து பஸ்சேவை (இல 786) இடம் பெறும் இப் பிரதான வீதியை சம்பந்தப்பட்டவர்கள் செப்பனிடாமல் தொடாந்தும் அசமந்தப் போக்கில் இருந்து வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-49)

## நிலைமை வழமைக்குத் திரும்புகிறது

(கொழும்பு)

சுனாமிபேரலைகளினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை படிபபடியாகக் குறைந்து வருவதுடன், நிலைமை வழமைக்குத் திரும்பி வருவதாகவும் நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறானோரின் எண்ணிக்கை இப்போது 1 இலட்சத்து 36 ஆயிரம் ஆகக் குறைந்திருக்கின்றது. சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் நலன்புரி நிலையங்களில் 8 இலட்சத்திற்கும் அதிகமானோர் தங்கி இருந்தார்கள்.

எனினும், தற்போது இத் தொகை குறைவடைந்துள்ளதுடன், நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கையும் 754 இல் இருந்து 304 ஆகக் குறைந்திருக்கின்றது. (ற)

## அலையில் சிக்கி மீண்ட அலையரசி

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவில் அலையினால் அள்ளிச் செல்லப்பட்டுக் காப்பாற்றப்பட்ட 8 மாதக் குழந்தைக்கு அலையரசி என்று தமிழீழ விடுதலைப்புலிகள் பெயர் சூட்டியுள்ளனர். (க-51)

# நேதாஜியின் மரணம் குறித்து தொடரும் மர்மங்கள்

(இஸ்லாமாபத்)

இந்திய தேசிய இராணுவத்தைத் தொடங்கிய நேதாஜி சுபாஷ சந்திரபோஸ் உயிரோடு எரிந்துகொண்டிருந்ததை நேரில் பார்த்ததாகக் கூறுகிறார் ஓய்வுபெற்ற பாகிஸ்தான இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஹபிப் உர்-ரகுமான்.

இதை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர் சஹாரியார் கான் 'கிரிக்கெட் அமைதிக்கான பாலம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள புத்தகத்தில் தெரிவித்துள்ளார்.

கரகோரம் நெடுஞ்சாலை வழியாக பரஸ்பரம் வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவிக்கும் நோக்கில் சீன எல்லையில் சிங்கியாங் மாகாணத்தில் கஷ்கர் நகரில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் பகுதிக்கு 1967இல் 4 உறுபபினர் சிறப்புக்குழு அனுப்பப்பட்டது. அக்குழுவில் இடம்பெற்றிருந்தார் ரகுமான். அப்போது ரகுமானைச் சந்தித்தபோது அவர் தமமிடம் கூறியதாக கான் தமது புத்தகத்தல தெரிவித்துள்ள தகவல்கள் வருமாறு,

நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி இந்தியாவுக்குத் திரும்பியபோது கைதுசெய்யப்பட்டு சிறையில் இருந்தேன். விடுதலையான பிறகு பாகிஸ்தான் இராணுவத்தில் சேர்ந்தேன்: இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றிய போது நேதாஜியுடன் நெருக்கம் ஏற்பட்டது. அவரது மெய்க்காப்பாளராக பின்னர் நியமிக்கப்பட்டேன்.

அதனால், நேதாஜியின் பயணத்தின் போது அவருடன் சென்றிருந்தேன். 1945இல் ஜப்பானுக்கு விமானத்தில் சென்றுகொண்டிருந்தோம். தைவான் மீது நேதாஜியின் விமானம் பறந்துகொண்டிருந்தபோது அதன் ஒரு என்ஜினில் கோளாறு ஏற்பட்டது. விமான பைலட் சாமர்த்தியமாக சமாளித்து விமானத்தை இறக்கமுறபட்டார்.

ஆனால் மரங்கள் அடர்ந்த காட்டுப்பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கியது. வால பகுதியில் நான் அமர்ந்திருந்ததால், விமானத்திலிருந்து வெகுதூரத்தில் தூக்கியெறியப்பட்டேன். படுகாயத்துடன் எழுந்து நேதாஜியைக் காப்பாற்றுவதற்காக விமானத்தின அருகே ஓடினேன. அப்போது அங்கு நேதாஜி அணிந்திருந்த ஆடையில் தீப்பிடித்து அவர் உயிரோடு எரிந்துகொண்டிருந்தார். நேதாஜியைக் காப்பாற்ற நானும் எனது சகாக்களும் முயற்சித்தோம். ஆனால் பலனேதும் ஏற்படவில்லை என்று கூறினார் ரகுமான்.

விமான விபத்தில் நேதாஜி இறந்ததை நேரில் பார்த்த சாட்சி ரகுமான் என்று தமது புத்தகத்தில் ஆணித்தரமாகக் கூறியுள்ளார் கான். பாகிஸ்தானின் முன்னாள் வெளியுறவுச் செயலரான கான், 1999இல் இந்தியாவுககு வந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் மேலாளராகவும் இருந்துள்ளார்.


இந்நிலையில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மறைவு குறித்து நிலவும் மர்மத்தில் இன்னொரு திருப்பமாக, அவரது இறப்புக்குக் காரணமாகக் கூறப்படும் தைப்பே விமான விபததுச் சம்பவமே நிகழவில்லை என்று தைவான் அரசு கூறியுள்ளது.

1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18இல் தைப்பே விமான நிலையத்தில் நேரிட்ட விமான விபத்தில் நேதாஜி இறந்திருக்கலாம் என்று கருதப்பட்டு வந்தது.

நேதாஜி மறைவு மர்மம் குறித்து விசாரித்து வரும் ஒரு நபர் கமிஷனின் தலைவரான எம்.கே.முகர்ஜி கல்கத்தாவில் நிருபர்களிடம் கடந்த வியாழக்கிழமை கூறியதாவது,

தைபே நகரில் 1945 ஆகஸ்ட் 14க்கும் செட்ரெம்பர் 20ஆம் திகதிக்கும் இடையில் விமான விபத்து நேரிட்டதற்கான சான்று எதுவும இல்லை என தைவான் அரசு நிர்வாகம் சமீபத்தில் நான அங்கு சென்றிருந்தபோது என்னிடம் தெரிவித்தது.

இதற்கான ஆவண ஆதாரங்களை 15 நாளுக்குள் அனுப்புவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)




# வெந்நீர் குளியல்



(டோக்கியோ)

ஜப்பானின் வடக்கு பகுதியில் உள்ள மகோடெட் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் இப்போது கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதுடன் கடும் குளிரும் நிலவுகிறது.

அங்குள்ள உயிரியல் பூங்காவில் உள்ள குரங்குகளால் இந்தக் குளிரைத் தாங்க முடியவில்லை. இதனால் அந்தக் குரங்குகள் வெந்நீரில் குளித்து வெதுவெதுப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன.

இந்தப் பகுதியில் குளிர் நிலவினாலும் அருகே உள்ள யுனு காவா பகுதியில் ஒரு வெந்நீரூற்று உள்ளது. அந்த வெந்நீர் ஊற்றில் இருந்து குழாய் மூலம் இந்தப் பூங்காவுக்கு வெந்நீரைக்கொண்டு வருகிறார்கள். 30 ஆண்டுகளுக்கு முன்பே இந்த வெந்நீர் குழாய் போடப்பட்டுவிட்டது. (ற)

# ஆப்கான் விமானத்தின் பாகங்கள் காபூல் அருகே கண்டுபிடிப்பு

(காபூல்)

கடந்த வியாழக்கிழமை 104 பயணிகளுடன் காணாமல் போன ஆப்கானிஸ்தான் ஏர்லைன்ஸ் விமானத்தின் பாகங்கள் தலைநகர் காபூலுக்குக் கிழக்கில் 57கி.மீ. தொலைவில் சிதறுண்டு கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹெராத் நகரில் இருந்து காபூலுக்குச் சென்றுகொண்டிருந்த போயிங் 737 விமானம் பனிப்பொழிவு அதிகமாக இருந்த காரணத்தால் வேறு ஊருக்குச் செல்ல அனுமதி கேட்டது.

ஆனால் உடனடியாக ரேடாரின் கண்காணிப்பில் இருந்து அவ் விமானம் விலகிச் சென்றது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

## 51 வது தேசியத் திரைப்பட விழாவில்

# சிறந்த நடிகர்களுக்கான விருதுகளை ஜனாதிபதி அப்துல் கலாம் வழங்கினார்



சிறந்த நடிகருக்கான தேசிய விருதை நடிகர் விக்கிரமுக்கு இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் வழங்கினார். சிறந்த நடிகைக்கான விருது மீரா ஜாஸ்மினுக்கு வழங்கப்பட்டது.

திரைப்படத் துறையில் மிகச் சிறந்த சாதனை படைத்த மிர்னாள் சென்னுக்கு மிக உயரிய விருதான தாதா சாகிப் பால்கே விருது வழங்கப்பட்டது.

திரைப்படத்துறையில் சிறந்த சாதனை படைத்தவர்களுக்கு ஆணடு தோறும் தேசிய வருது வழங்கப்பட்டு வருகிறது. 51வது தேசிய திரைப்பட விருது வழங்கும் விழா புதுடில்லியில் கடந்த புதன்கிழமை விஞ்ஞான் பவனில் நடந்தது.

சிறந்த நடிகர், நடிகை, தயாரிப்பாளர், இயக்குனர் உட்பட திரை உலகில் சாதனை புரிந்த பலருக்கு ஜனாதிபதி அப்துல் கலாம் விருது வழங்கினார். சிறந்த நடிகருக்கான தேசிய விருது தமிழில் வெளியான 'பிதாமகன' படத்தில் நடித்த விக்ரமுக்கு வழங்கப்பட்டது. மலையாளத் திரைப்படமான 'படம் ஒன்னு ஒரு விளப்பம்' என்ற படத்தில் நடித்த நடிகை மீரா ஜாஸ்மினுக்கு சிறந்த நடிகைக்கான தேசிய விருது வழங்கப்பட்டது. மற்றொரு தமிழ் திரைப்படமான 'இயற்கை' படத்தை இயக்கிய ஜனாவும் விருது பெற்றார். (ற)

# கைதியின் கடிதம்

போப்பாண்டவரை 1981ஆம் ஆண்டு கொலைசெய்ய முயன்ற துருக்கி பிரஜை முகமது அலி அவருக்கு தறபோது கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

போப்பாண்டவர் விரைவில் குணமடைய வேண்டும் என்று அவர் சிறையிலிருந்து எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற)

# நாகரிக உலகம்

வைரங்கள் 240 பதித்து தங்கமுலாம் பூசப்பட்ட செல்போன் தென்கொரிய இணைய தளத்தில் ஏலத்துக்கு விடப்பட்டுள்ளது.

ஆரம்ப விலை ரூ.4 இலட்சத்து 28 ஆயிரத்து 120 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி வரை ஏலம் நடக்கும்.

உலகில் வேறு உங்குமே இதுபோன்ற போன் கிடையாது என்கிறார் இதை வடிவமைத்த சோய் மூன் - யங் (49).

இந்த போன் தயாரிப்பில் பத்து பொறியியலாளர்கள் இவருக்கு உறுதுணையாக இருந்திருககின்றனா. இந்த போனை தயாரிக்க 3 மாதங்கள் பிடித்தன என்றார் மூன்-யங். (ற)

# காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு

## முஷாரப் கருத்து

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வு கிடைக்கும் என பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு நியாயமான மற்றும் நிரந்தரத் தீர்வுகாண பேச்சுவார்த்தையால் மட்டும்தான் முடியும் என பாகிஸ்தான் நம்புகிறது. இந்த நோக்கத்தில்தான் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

காஷ்மீர் ஆதரவு தினத்தை முன்னிட்டு வெளியிட்ட செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ற)

## ஈராக் எண்ணெய் திட்ட ஊழல்

# சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கொபி அனான் நடவடிக்கை



ஐ.நா ஈராக்கிற்கான உணவுககு எண்ணெய திட்டத்தின் தலைவர் பெருமளவில் லஞ்சம் பெற்றதாகவும், தனக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு எண்ணெய் ஒதுக்கீடு செய்ததாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குவைத் மீது கடந்த 1990ல் ஈராக் படையெடுத்தது. இதற்காக, ஈராக் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டது. ஈராக் மக்களின் நலனுக்காக, உணவுக்கு எண்ணெய் திட்டதை ஐ.நா அனுமதித்தது. 1996 முதல் 2003 வரை ஐ.நா கண்காணிப்பில் இந்தத் திட்டம் செயல்பட்டது. இதற்காக அமைக்கப்பட்ட குழுவுக்கு பெனன் செவன் தலைவராக இருந்தார். இத்திட்டத்தில் முறைகேடுகள் நடந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அமெரிக்க பெடரல் வங்கியின் முன்னாள தலைவர் பால் வோல்கர் தலைமையிலான குழு, இந்த முறைகேடு குறித்து விசாரிக்க அமைக்கப்பட்டது. இக்குழு கடந்த வியாழக்கிழமை தனது இடைக்கால அறிக்கையை அளித்தது. 219 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கை, திட்டத்தின் தலைவர் மற்றும் பல்வேறு ஐ.நா அதிகாரிகள் மீது ஊழல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. குறிப்பாக, இத்திட்டத்தில் சலுகைகாட்ட ஏராளமான பணத்தை லஞ்சமாகப் பெற்றிருப்பதாக பெனன் செவன மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

செல்வாக்கைப் பயன்படுத்தி தனக்கு வேண்டிய கம்பனிகளுககு குறைந்த விலையில் எண்ணெய் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ததாகவும் பெனன் செவன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணை மேலும் தொடர்கிறது. இது இடைக்கால அறிக்கை தான். முழு விசாரணையில் மேலும் பல உண்மைகள் தெரிய வரும் என்று வொல்கர் தெரிவித்தார்.

அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை பெனன் செவன் மறுத்துள்ளார். இந்நிலையில், பெனன் செவன் உட்பட முறைகேடு செய்த அனைத்து ஐ.நா அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஐ.நா பொதுச்செயலாளர் கொபி அனான் முடிவு செய்துள்ளார். (ற)

# இலட்சக் கணக்கான தமிழ்மக்களை ஏதிலிகளாக்கி விட்டு சில ஆயிரம் படையினரை வாழச் செய்வது இனவாத செயல்

## அரசின் அராஜகப்போக்கிற்கு ஈழவேந்தன் எம்.பி. விசனம்

(யாழ்ப்பாணம்)

**உயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் மீள்குடியமரமுடியாது உயர் நீதிமன்றத்திற்கு சட்டமா அதிபர் அறிவிப்பு என்ற பொருள்பட அனைத்து தமிழ் ஊடகங்களிலும் அண்மையில் வெளிவந்த செய்தி எமக்கு வியப்பினைத்தரும் செய்தி அல்ல. மாறாக நாம் எதிர்பார்த்த செய்தியாகும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்துள்ளார்.**

வலிவடக்கை உயர் பாதுகாப்பு வலயமாக அரசு பிரகடனம் செய்துள்ளதால் அந்தப் பகுதியில் அமைந்துள்ள தமது சொந்த வீடுகளில் குடியமர அனுமதி மறுக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுபபினர் மாவை சேனாதிராசா மற்றும அதே பகுதியைச் சேர்ந்த ராஜதுரை ஆகியோர் தொடுத்த வழக்கில் அரசின் இச்செயற்பாடு எம் அடிப்படை உரிமைகளை மீறுவது என்று குறிப்பிட்டிருப்பது முற்றிலும் பொருத்தமுடையதே.

இவ்வழக்கு உயர் நீதிமன்ற சரத் என்.சில்வா தலைமையில் நடைபெற்றது. மாவை சேனாதிராஜா சார்பிலும் ராஜதுரை சார்பிலும் பெயர் பெற்ற சட்டத்தரணிகள் மோகன் பாலேந்திரா, கே.கனகேஸ்வரன், எம். ஏ. சுமந்திரன், வி.எஸ்.கணேசலிங்கம் ஆகியோர் வாதிடுவதற்காக வந்திருந்தனர்.

அரசின்சார்பில்சட்டத்தரணி உவித்த கெலகேவ மாவை சேனாதிராஜா, ராஜதுரை ஆகியோரது வீடுகளும், வேளாண்மை நிலங்களும் பலாலி விமானப்படைத் தளத்திற்கு அண்மையில் இருப்பதனால் அந்தப் பகுதியில் குடியமர்வதற்கும் வேளாண்மையில் ஈடுபடுவதற்கும் உரிமை வழங்கமுடியாது என்று கூறியதுடன் இவர்கள் விரும்பினால் வேறு இடங்களில் காணி வழங்கமுடியும் எனவும் கூறியிருக்கும் கூற்றுத்தான் எமக்கு ஆத்திரத்தை வருவிக்கும் அடாத்தான கூற்றாகும். வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் நிகழ்ச்சியாகும்.

தமிழீழத்தின் பிரிக்கமுடியாத அங்கமாக விளங்குவது யாழ்ப்பாண குடாநாடாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு பகுதிதான் மாவிட்டபுரம். மாவிட்டபுரத்திலேதான் இவர்கள் இருவரும் வதிகின்றனர். பலாலி வானூர்தி நிலையத்திற்கு அண்மையில் இவர்களுடைய வதிவிடங்களும் காணி,பூமியும் அமைந்திருப்பது இவர்கள் செய்த தவறு என்ற தொனியில் இவர்கள் மீது இரக்கம் காட்டி வேறு இடங்களில் காணிகளை இவர்களுக்கு வழங்கமுடியும் என்று சட்டமா அதிபர் வாதிட்டுள்ளமுறை தமிழர் அடிப்படை உரிமைகளை முற்றாக பறிப்பதோடு அவர்களை இம் மண்ணிலே கூண்டோடு அழிக்கும் முயற்சி ஆகும்.

சட்டமா அதிபரின் இக்கூற்று மாவை சேனாதிராசாவுக்கும், ராசதுரைக்கும் எதிராக கூறப்பட்ட கருத்துக்கள் என்று கொள்ளமறுகின்றோம். மாறாக எந்தையும் தாயும் ஆயிரம் ஆண்டுகள் மகிழ்ந்து குலாவி வாழ்ந்துமடிந்த இம் மண்ணிலிருந்து எம்மை வெளியேற்றி வேரோடு சாய்கின்ற முயற்சி என்றே நாம் குற்றம் சுமத்துகிறோம்.

• இலட்சக்கணக்கன தமிழ் மக்களை இம் மண்ணிலும் வேற்று மண்ணிலும் ஏதுமற்ற ஏதிலிகளாக விட்டுவிட்டு, சில ஆயிரக்கணக்கான படையினரை உயர் பாதுகாப்பு வலயம் அமைத்து அதற்குள் அமைதியாக படையினரை வாழச்செய்யும் வெறிகொண்ட சிங்கள அரசின் கொடிய செயலை நாம் எந்நிலையிலும் ஏற்கமுடியாது. சிங்களப்படை இங்கு குடிபுகுந்து இருப்பதுபோல் சிங்களப் பகுதிகளில் எம்மவரில் ஒரு பகுதியினர் நாம் பாதுகாப்பாக இருக்க ஒன்றாக அங்கு வாழ விரும புகின்றோம் என்று கோரிக்கை விடுவார்களாயின் இரத்தக்களரி ஏற்படாதா என வினவ விரும்புகின்றோம்.

எனவேதான் சென்ற ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி மாலை யாழ்ப்பாணம், நல்லூர் கோவில்வீதியிலுள்ள போர்நிறுத்த ஆணைக் குழுவின் அலுவலகத்தில் யாழ்ப்பாணப் படைத்தளபதி சுனில் தென்னக்கோனுடன் நான் ஏறக்குறைய இரண்டு மணிநேரம் உரையாடியபோது ஈழத் தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் நோக்குடன் தொடர்ந்து இங்கு இராணுவம் குடிகொண்டிருப்பதை நாம் ஏற்கமுடியாது என்று கூறினோம்.

வேளாண்மையில் ஈடுபட்ட மக்கள் சரி, கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் சரி, பொதுமக்கள் சரி தம் மண்ணில் தொடர்ந்து வாழமுடியாத சூழ்நிலை ஏற்படுமாயின் பொறுமையின் எல்லைக்கு தள்ளப்பட்டுள்ள மக்கள் கொதித்து எழுவார்களாயின் நாம் விரும்பாத விளைவுகள் ஏற்படும் என்று குறிப்பிட்ட நாம், அத்தோடு எம் மக்களில் பலர் தம் காணிகளின் எல்லைக் கோடுகளையே அறியாது தத்தளிககின்ற நிலையை நீங்கள் அறிவீர்களா எனக் கேட்டோம்.

எனவே யாழ். மண்ணில் வலோத்காரமாக குடிபுகுந்துள்ள ஏறக் குறைய 50 ஆயிரம் இராணுவம் உடனடியாக வெளியேறவேண்டும் என்று படைத்தளபதிக்குக் கூறினோம்.

அவருடன் நாம் உரையாடி ஏறக்குறை 4 மாதங்கள் உருண்டோடி விட்டன. இன்னும் இராணுவத்தின் வெறியாட்டம், அட்டகாசம் தொடர்கிறது. ஐ. நா. மன்ற சாசனத்தின் படி ஒரு நாடோ ஒரு இனமோ மற்றைய இனத்தை அழிக்கும் எந் நிலையிலும் செயற்படின் அடக்கி ஒடுக்கப்படுகின்ற இனத்திற்கு கிளர்ந்தொழுந்து போரிடும் உரிமை உண்டு என்பதை சிங்கள அரசு உணர்வது நலம்.

அடிமையாய் இருப்பது ஆபத்து அடிமையாய் இருக்கின்றோம் என்பதை உணராமல் இருப்பது பேராபத்து இந்த உண்மையை ஈழத் தமிழினம் உணர்ந்து விழிப்புடன் செயற்பட்டால்தான் எமக்கு விடிவு கிட்டும். விடுதலை கிடைக்கும் அன்றேல் காலப்போக்கில் நாம் கூண்டோடு அழிக்கப்படுவது உறுதி.

வரலாறு வசைபாடத் எம் வழித் தோன்றல்கள் எம்மீது பழிதுற்ற ஏனோதானே என்ற வாழ்வை ஏற்றுக் கொள்ளப்போகின்றோமா? அல்லது விடுதலை எமது பிறப்புரிமை என்பதை உணர்ந்து போர்க்களத்தில் குதிக்கப்போகின்றோமா என்பது எமை எதிர்நோக்குகின்ற பெருங்கேள்வியாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ப)

# மனைவியைக் கொன்று புதைத்த கணவன் பொலிஸாரால் கைது

(புத்தளம்)

மனைவியினை அடித்துக் கொலை செய்து வீட்டின் பின்புறத்தில் குழிவெட்டிப் புதைத்த கணவனை காலியவெவப் பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர்.

காலிவெவ ரணவராயபுரம் பகுதியிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த மாதம் 20ஆம் திகதி மனைவிக்கும் தனக்கும் வாய்த்தர்ககம் ஏற்பட்டதையடுத்து தான் அவரை தாக்கியதாகவும, அதனால் அவர் மரணமானதாக அறிந்துகொண்டதையடுத்து வீட்டின் பின் பகுதியில் உள்ள குழியொன்றில் இட்டு புதைத்ததாகவும் பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் பிரஸ்தாப நபர் தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட டி.ஜி.சிறியாவதி (வயது34) இரு பிள்ளைகளின் தாயாராவார்.

கொல்லப்பட்டவரின் இரு புதல்விகளும் கடந்த ஒருவாரகாலமாக தனது தாயைக் காணவில்லையெனத் தேடியபோது வீட்டின் பினபுறத்தில் ஒரு பகுதியில் சில வாழைக்குட்டிகள் நடப்பட்டிருப்பதனால் சந்தேகம் கொண்டதனால் காலிவெவ பொலிஸாருக்கு இப்பிள்ளைகள் அறிவித்தனர்.

இதையடுத்து பிரஸ்தாப நபரை பொலிஸார் கைதுசெய்து விசாரணை நடத்தியபோது இவ்விடயம் தெரிய வந்துள்ளது, (ரு-15)

# முஸ்லிம் பிரதேசங்களில் நிவாரண விநியோகத்தை கையாள முஸ்லிம் அமைச்சர்களின் குழுவொன்றை உடன் நியமிக்குக!

## அமைச்சர் ரிஷாத் பதியுதின் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(புத்தளம்)

அம்பாறை மாவட்ட முஸ்லிம் கிராமங்களில் அரசின் நிவாரண நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லையென தெரிவித்து மக்கள் போராட்டங்களை ஆரம்பித்துள்ளதால் இவ்விடயத்தை கையாள்வதற்கென முஸ்லிம் அமைச்சர்களை கொண்ட குழுவொன்றை நியமிக்குமாறு வன்னிமாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாற்றுக் குழுப்பிரதிநிதியுமான ரிஷாத் பதியுதீன், ஜனாதிபதியிடம் அவசர வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

ஆழிப்பேரலைகளினால் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்படடு மக்கள் இன்று வீதிக்கு இறங்கி மறியல்போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்வதற்கான காரணங்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படவேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது.

அவர்களுக்கான நிவாரண உதவிகள் உரியமுறையில் சென்றடையாமைக்கு அரச அதிகாரிகளின் செயற்பாடுகளும் காரணமாக அமைந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்

நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களை உரியமுறையில் சென்றடைய உரிய வேலைத்திட்மென்றை நடைமுறைப்படுத்த முஸ்லிம் அமைச்சர்களைக் கொண்ட குழுவினை உடன் ஏற்படுத்துவதுடன் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம பரதேசங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொளள முன்னர் இந்த அமைச்சரவைக்குழுவினை அமைப்பதன்மூலமே இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அமைச்சர் ரிஷாத் பதியுதன் மேலும குறிப்பிட்டுள்ளார்.

(ரு-15)

# அரசு உரியமுறையில் நிவாரண பணிகளை முன்னெடுக்கவில்லை

## ரணில் சர்வதேச நிறுவனத்திற்கு செவ்வி

(கொழும்பு)

அரசாங்கம் உரிய முறையில் நிவாரணப்பணிகளை முன்னெடுக்கவிலலை என ஐக்கியதேசியக் கட்சியன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றம்சுமத்தி இருக்கிறார்.

நிவாரண உதவிப்பணிகளில் இடம்பெற்ற முறைக்கேடுகள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள சர்வதேச நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வெளிநாடுகள் வழங்கிய நிதியையும் நிவாரணப் பொருட்களையும் சுனாமி பேரலையினால் பாதிப்புற்ற சகல மக்களுக்கும சமமாக பகிர்ந்தளிக்கவில்லை.

குறிப்பாக கூடுதலாக சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவரை நிவாரணங்கள் எதுவும் உரியமுறையில் வழங்கப்படவல்லை அது மட்டுமன்றி நிவாரணப்பணிகளுக்கென வெளிநாடுகள் அரசுக்கு வழங்கிய நிதியை அரசாங்கமே துஷ்பிரயோகம் செய்வதாக பலர் தெரிவித்துள்ளனர்.

நிவாரணப்பணிகளுக்கென ஒதுக்கிய நிதியை அரசு ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தி வருவதாக கூறப்படுகிறது.

இவை தவிர அரச அதிகாரிகளும் நிவாரண மோசடிகளில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது. இதனால் அவர்களை சேவையிலிருந்து அரசு இடைநிறுத்தியுள்ளதாகவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இவ்வாறு அரசும், அரச அதிகாரிகளும் தவறானமுறையில் நிவாரண உதவிகளை தமதாக்க முயற்சிக்கின்றனர். இதனைத்தான் தமிழீழ விடுதலை புலிகளும் கூறிவருகின்றனர்.

அத்துடன் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஊடாக நிவாரண உதவிகளை கோரியுள்ளார்கள் என்றார்.

இதேவேளை, அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகள் குறித்து கருத்துவெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி செயலகத்தில் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுக்கும் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கும இடையே தொடர்ச்சியான பேச்சுவார்த்தை இடம்பெற்றுவருவதாக தனக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாக தெரிவித்தார்.



ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீமபீரிஸ் மற்றும் மனோதித் தவெல ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருப்பதாகவும் அனர்த்த நிவாரண முகாமைத்துவம் தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, இந்த நிலையில் சமாதான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்துச்செல்ல வேண்டியது அவசியம் என்றும் தெரிவித்திருக்கின்றார். (க-9)

# கோண்டாவிலில் திருட்டு அதிகரிப்பு

பலாலி வீதி கோண்டாவில் கிழக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 3 ஆம் திகதி அதிகாலை மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் கையடக்கத் தொலைபேசிகளும் திருட்டுப் போயுள்ளன.

வீட்டின் உரிமையாளர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்தவேளை தங்க நகைகள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை திருடர்கள் களவாடியுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் கையடக்கத தொலைபேசி தொடர்பாக தமக்கு பயனுள்ள தகவல்கள் கிடைத்துள்ளதால் திருட்டில் ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட வாய்ப்பு உண்டு என்று தெரிவித்தார். (க-130)

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து - குறள்

வலம்புரி

# முகாமைத்துவத்திறனற்ற யாழ்ப்பாண நிர்வாகம்

"முகாமைத்துவம்", "நிர்வாகம்" என்ற சொற்பதங்கள் இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகில் மிகவும் பிரபல்யம் பெற்றவையாகும்.

இருப்பதைக் கொண்டு சமாளிப்பதே முகாமைத்துவம் என நவீன கல்வியியலாளர்கள் வகை கூறுவர்.

ஆரம்ப காலங்களில் "மேலாண்மை" என்ற சொற் பதமே முகாமைத்துவத்திற்கு ஈடானதாகப் பயன்படுத்தப்பட்டது. எனினும் மேலாண்மை என்பது உயர்மட்டத்திலிருந்து விடுக்கப்படுகின்ற உத்தரவுகளை கீழ்மட்டம் நிறைவேற்றுவது என்பதாக இருந்ததனாலும், மேலாண்மை என்பது அதிகாரம் செலுத்துவது போன்ற தொனிப்பை வெளிப்படுத்துவதாலும் அதனை இன்றைய கல்வியாளர்கள் புறந்தள்ளிவிட்டு முகாமைத்துவம் என்பதையே பயன்படுத்திக்கொள்கின்றனர்.

அவ்வாறாயின் முகாமைத்துவம் என்பது பரந்துபட்ட கருத்தை - செயலாக்கத்தை உள்ளடக்கியதாக இருப்பது அவசியமாகும். அதன் காரணமாகவே இருப்பதைக் கொண்டு சமாளிப்பது என்ற வரைவிலக்கணம், முகாமைத்துவத்திற்கு பொருத்தப்பட்டுள்ளது.

இருப்பதைக் கொண்டு சமாளிப்பது என்பது ஓர் சாதாரணமான விடயம் அன்று. அதனை நிறைவேற்றுவது ஆயின் உயர்மட்ட முகாமை முதல் அடிமட்ட முகாமைவரை பூரண ஒத்துழைப்பு வழங்குவது மிகவும் இன்றியமையாததாகும்.

இங்குதான் சிக்கல்கள் எழுகின்றன. உயர்மட்ட முகாமை, அடிமட்ட முகாமையுடன் எந்தளவு தூரம் நல்லுறவைக் கொண்டுள்ளது என்பதைப் பொறுத்தே செயலாக்கத்தின் வெற்றி தங்கியுள்ளது.

ஆயினும், உயர்மட்ட முகாமை இரண்டு போக்கினைக் கொண்டுள்ளது. அதில் ஒன்று மிகக் கடுமையான போக்கு. மற்றையது மிகக் இளகிய போக்கு. இதில் மிகக் கடுமையான போக்கு இராணுவ ரீதியான முகாமையே அன்றி அது பொது நிர்வாகத்திற்கு உகந்ததல்ல. இருந்தும் சில அதிகாரிகள் உச்ச அதிகாரப் பிரயோகத்தில் தமது நிர்வாகச் செயற்பாட்டை நகர்த்திச் செல்கின்றனர். இதன்போது பணியாளர்களை மதியாமை, அவதூறான சொற்பிரயோகம் என்ற ரீதியில் பணியாளர்கள் உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர். இந்த இடத்தில் சில அதிகாரிகள் "அதிகார வார்த்தைகள்" மூலம் பெண் பணியாளர்களை தமது இச்சைக்கு பலியாக்கிக் கொள்வதுமுண்டு.

மாறாக இளகிய முகாமைத்துவம் அதிகாரிகளின் பலவீனமாக, கீழ்மட்டப் பணியாளர்களால் கருதப்பட அங்கு ஒழுங்கீனங்கள் தலைவிரித்தாடத் தொடங்கிவிடுகின்றன. எனவே உள்ளதையும் பழுதாக்குவதாக இந்த இளகிய முகாமைத்துவம் உள்ளது.

மேற்கூறப்பட்ட இரண்டு முகாமைத்துவ முறைகளே யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. இதனாலேயே யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு சில திட்டங்களைத் தவிர மற்றைய திட்டங்கள் செயலற்றுப்போகின்றன. இதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள திறந்த பல்கலைக் கழகத்தை உதாரணமாகக் காட்டிக் கொள்ளலாம். அங்கு முகாமைத்துவத்தின் பலவீனம் பளிச்சிடுகின்றது. அலுவலகத் தினுள் கால்நடைகள் போய்வரும் அளவிற்கு யாழ்ப்பாண திறந்த பல்கலைக்கழகம் சீரழிந்து போயுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் அங்கு சிறந்த முகாமைத்துவம் இல்லை என்பதே ஆகும்.

# ஐ.தே.க வின் முட்டுக்கட்டைகளுக்கு மத்தியிலும் மக்களுக்குத் தொடர்ந்து உதவி வழங்குவோம்

## -அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாடுகள் பெருமளவிலான உதவிகளை வழங்கிவருவதும், அனர்த்த முகாமைத்துவத்தை நாம் திறமையுடன் கையாள்வதும் ஐக்கிய தேசியககட்சிக்குக் கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித் துள்ளார்.

எமது அரசைக் கவிழ்க்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் சகல முயற்சிகளுக்கு மத்தியிலும் நாம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகல உதவிகளையும் தொடர்ந்தும் வழங்கி வருவோம் என்றும் அவர் கூறினார்.

மேலும் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு பல தலைவர்கள் முயன்றுவரும் வேளையில் வேறுசிலர் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

நாட்டை மீளக் கட்டியெழுப்பும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட அன்றைய தினம் வெளியாகிய ஜனாதிபதியின் உரையிலிருந்து மக்களை திசைதிருப்ப இவர்கள் முயன்றுவருகின்றனர்.

அவ்வுரையில் ஜனாதிபதி இன்னும் 5 வருடங்களில் பொதுத் தேர்தல் எதுவும் நடைபெறாது எனத் தெரிவித்தார். ஆனால் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறாது எனத் தெரிவித்திருக்கவில்லை.

இடம்பெற்ற தேர்தல்களின் வெற்றியை இழந்த ஒரே ஒரு தலைவர் உலகில் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே.

தற்போது அவர் ஜனாதிபதியாகுவது பற்றி பகல் கனவு காணகிறார் எனவும் தெரிவித்த மங்கள சமரவீர, மக்களுக்குத் தவறான விளக்கங்களை அளிக்காமல் நாட்டை மீளக்கட்டியெழுபப அரசாங்கத்துடன் ஒன்றிணைய வருமாறு ஐக்கிய தேசியக்கட்சிக்கு அழைப்பு விடுத்தார். (ந-6)

# சுற்றுலாத்துறையைக் கருத்தில் கொண்டு 100 மீற்றர் தூர எல்லை மீளாய்வு செய்யப்படும்

## சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்வேறு சர்ச்சைகளிற்கு மத்தியிலும் தனது 100 மீற்றர் கரையோரப் பாதுகாப்புத் திட்டத்தை சுற்றுலாத்துறையின் நனமைகளைக் கருத்தில் கொண்டு மீளாய்வு செய்ய இருப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் பி.ராமானுஜம் தெரிவித்துள்ளார்.

இங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்காக உலக சுற்றுலா ஸ்தாபனத்தின் நிபுணர்கள் விரைவில் இலங்கை வரவுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் 100 மீற்றர் திட்டமானது உண்மையில வரவேற்கத்தக்கதாக இருப்பினும், ஹோட்டல்கள் தொடர்பில இவற்றில் சில திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும் என அவ் ஸ்தாபனம் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

இதன்படி உல்லாச ஹோட்டல்கள், வாடிவீடுகள் என்பன அமைபபதில் சிக்கல்கள் இருக்கமாட்டாது என்றும், அரசாங்கத்தின் 100 மீற்றர் திட்டம் தொடர்பாக கவனமெடுக்காமல் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள சில ஹோட்டல்கள் தற்போது தமது புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றன என்றும் அவர் கூறினார்.

ஆயினும் இதுபற்றிய ஒரு தீர்மானம் பெறப்பட முன்னர் இவற்றைத் தள்ளிப்போடுவது சிறப்பானது என்றும் சில அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

ஆனால், கடுமையாகப் பாதிக்கப்பட்ட கிழக்குக் கரையோரத்தில் 100 மீற்றர் திட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-6)

# மணல் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க ஆழ்கடலில் இருந்து மணலை அகழ்ந்தெடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஆழ்கடலில் இருந்து மணலை அகழ்ந்து எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த முயற்சி எதிர்காலத்தில் கட்டட நிர்மாணப் பணிகளுக்குப் பெரிதும் உதவும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிறுவனத்தின் விஞ்ஞானி ஏ.கே.ஆரியரட்ண கருத்துத் தெரிவிக்கையில், கடல் மணலை இயற்கையான முறைகளில் சுத்திகரிப்பது இலகுவானது.

மணலில் உள்ள உவர்ப்புத் தன்மையை நீக்குவதற்கு மழையை எதிர்பார்த்து இருப்பது காலதாமதத்தை தருகின்ற போதிலும், அந்த முறையைப் பின்பற்றுவது மணலுக்கு உள்ள தட்டுப்பாட்டை நீக்குவதற்குப் பெரிதும் உதவும் என்று குறிப்பிட்டார்.சுற்றாடல் துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இதுளளகுறித்துத் தெரிவிக்கையில்,

ஆழ் கடலில் இருந்து மணலை அகற்றுவதற்கு ஏற்கனவே ஐந்து உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டு இருப்பதாகக் கூறினார். (ந)

# நிவாரணம் வழங்கப்படாததை ஆட்சேபித்து அம்பாறையில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர்,மாளிகைக்காடு, பொத்துவில் மற்றும சாய்ந்தமருது ஆகிய முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஆழிப் பேரலைகளினால் தாக்கப்பட்டு 41 நாட்கள் கடந்த பின்னரும் பெருமளவில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு அரசின் நிவாரண உதவிகள் உரியமுறையில் வழங்கப்படாமைக்கு எதிப்புத் தெரிவித்தும், சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் தாமதப போக்கைக் கடைப்பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

முஸ்லிம் மக்களின் பொதுநல அமைப்புகள் இந்த ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்திருந்தன.

ஆாப்பாட்டம் தொடர்பாக கருத்து வெளியிட்ட அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஹேரத் அபயவீர சுனாமியினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களில் மக்களுக்கு உரிய முறையில நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் மக்கள் ஏன் ஆர்ப்பாட்டங்களை நடாத்தினார்கள் என்று எமக்குத் தெரியவில்லையென்று வீடுகள் அமைததுக் கொடுக்கும் விடயத்தில் உரிய இடங்களை இனங்காண்பதில் சில சிக்கல்கள இருப்பதினால் வீடுகள் அமைத்துக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டார். (ந-8)

# காலியில் சீரமைப்புப் பணிகளுக்கென பல்கலை மாணவர் குழு நியமிப்பு

(கொழும்பு)

காலி மாவட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ செயல் பாட்டினை சீரமைப்பதற்கென பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்று நியமிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் ஜெயக்கொடி இதுபற்றித் தெரிவிக்கையில், பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இந்த முயற்சி உதவும் என்று கூறினார். காலி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இதுபற்றிக் கூறினார். காலி மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் 6 பிரதேச செயலகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.எஞ்சியுள்ள 12 பிரதேச செயலகப் பிரிவுகளும் செயலற்ற நிலையிலேயே காணப்படுகின்றன.

மேற்படி கூட்டத்தில் சந்தைகளை அமைப்பது மற்றும் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமாத்தல் என்பன உட்பட மீள்கட்டுமானப்பணிகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. (ந)

# கிறிஸ்டோன் குறேக் இலங்கை வருகை

(கொழும்பு)

பிரேஸில் செனட் சபை உறுப்பினர் கிறிஸ்டோன் குறேக் நேற்று முன்தினம் அதிகாலை இலங்கையை வந்தடைந்தார். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தங்காலைப் பிரதேசத்தை இவர் சென்று பார்வையிடவுள்ளார்.

மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்தடைந்த இவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்துக கலந்துரையாடவுள்ளார். ஊனமுற்றவர்களின் நலன் குறித்து அவர் தனது விஜயத்தின்போது விசேடமாக கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டார, பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வவர்ணபால மறறும் கல்வியமைச்சின் அதிகாரிகள் ஆகியோரையும் இவா சந்திக்கக் கலந்துரையாடவுள்ளார். (ந-4)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

'நான் வாழ்கிறேன' என்று மனிதன சொல்கிறான். மரணபயம் தான் அவனை ஓர் அடிமைபோல உயிருடன் ஒட்டிக் கொண்டிருக்கச் செய்கிறது என்பது அவனுக்குத் தெரியாது. 'நான் இன்பம் அனுபவிக்கிறேன்' என்று அவன் சொல்கிறான். இயற்கை அவனை அடிமை கொண்டு விட்டது என்பதை அவன் கனவில் கூட அறிவதில்லை.

சுவாமி விவேகானந்தர்

# கண்காணிப்புக் குழுத் தலைமையுடன் சு.ப.தமிழ்ச்செல்வன் பேச்சு

கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் மற்றும் இலங்கை போர் நிறுத்த காணிப்புக் குழுவின் பதில் தலைவர் வேகன் விங்கர் ஆகியோர் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை தனித்தனியே சந்தித்துப் பேசியுள்ளனர்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மூலம் இக்குழுவினர் கிளிநொச்சி வந்தடைந்தனர்.

விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுக்கும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கருக்கும் இடையிலான சந்திப்பு காலை 9.45 மணி முதல் பிற்பகல 12.30 மணிவரை நடை பெற்றது.

இதனையடுத்து பிற்பகல் 12.45 மணியளவில் இலங்கைக்கான போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் வேகன் விங்கர் தலைமையிலான குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனை சந்தித்து பேசினர். (04)

# விபத்தில் சிறுமி பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுமி ஒருத்தி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று 'மானிப்பாய் தாவடியில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் மகேந்திரராஜா பானுஜா (வயது 6) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

ஐஸ்கிறீம் வாங்கிக்கொண்டு வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிள் மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அங்கு மரணமடைந்தார்.

(த-04,08)

# தலையற்ற சடலம் கரையொதுங்கியது

திருகோணமலையின் புறநகர் பகுதியில் உள்ள பள்ளத்தோட்டம் கடலோரத்தில் இனந்தெரியாத பெண்ணொருவரின் தலையற்ற சடலம் நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளது.

இம் முண்டம் வெளிநாட்டைச் சேர்ந்த இளம் பெண் ஒருவருடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது உருக்குலைந்த நிலையில் துர்நாற்றம் வீசுகின்றது இம் முண்டம் இதுவரை அடையாளம் காணப் படவில்லை. (ற-04)

# பொதுக்கட்டமைப்பை...

கிளி நொச்சிக்கு நேற்று வருகை தந்த நோர்வே தூதுவருடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதில் எங்களால் கொடுக்கப்பட்ட ஆலோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. இந்த வகையில் பொதுக்கட்டமைப்பினை நிறுவுவது எந்தளவு சாத்தியம் என்பது பற்றிக் கூற முடியாதுள்ளது. ஏனெனில் அரசாங்கம் புதிய நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருப்பதாக தெரிகிறதே தவிர பொதுக்கட்டமைப்பினை நிறுவுவதற்கு மனப்பூர்வமாக செயற்படுவதாக தெரியவில்லை.

சர்வதேச உதவிகள் நேரடியாகக் கிடைக்கக்கூடிய வகைகளை சர்வதேச சமூகம் பரீசிலிக்க வேண்டும்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளையும் அங்கு வசிக்கும் மக்களுக்கு உதவுவதற்கான ஆலோசனைகளை நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாக அரசுக்கு அனுப்பியிருந்தோம்.

எங்கள் ஆலோசனைக்கு எதிர்மறையான முடிவுகளைத்தான் தங்கள் கருத்துக்களாக அனுசரணையாளர் களூடாக எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள். அரசின் முடிவுகள் எமக்கு அதிர்ச்சி தருபவையாக உள்ளது. நடைமுறைச் சாத்தியமற்ற முடிவுகளை அரசு தெரியப்படுத்திக் கொண டிருப்பது இணக்கப்பாட்டிற்கு வந்து செயற்பாடுகளை மந்தப்படுத்தும் நோக்கோடுதான் செயற்படுவதாக எம்மால் உணர முடிகின்றது இதனால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச உதவிகள் ஏனைய வழி முறைகள் ஊடாகவேனும் வந்து சேர வேண்டும். அதற்கு உரிய வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும் என்பது தான் எமது நிலைப்பாடாக உள்ளது.

சர்வதேச உதவிகளை தமிழர் தாயகத்திற்கு கொண்டு வருவதற்கு ஒரு நடுநிலையான சர்வதேச நிறுவனமே பொறுப்பாக இருக்க வேண்டும்.

எமது முடிவுகளை அரசு கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. மேலும் வடகிழக்கிலே முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே முஸ்லிம்களின் பிரதிநிதித்துவமும் சில மாவட்டங்களில் பேணப்பட வேண்டும் என்பதனையும் நாம் வலியுறுத்தியுள்ளோம். கட்டமைப்பிலே உள்வாங்கப்பட வேண்டிய பிரதிநிதித்துவம் சம்பந்தமாக தமிழர் தாயக்த்திற்கான மீள் கட்டுமான நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கான நிதியத்தின் பாதுகா வலனாக நியமிக்கப்படும் விடயங்களிலும் பல சிக்கல்கள் இருப்பதாகவே எமக்கு தெரிகின்றது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளுக்கு தீர்வு காணப்படாமல் போனது போல் இந்த மனிதாபிமான உதவிகளையும் இழுத்தடிக்க முடியாது. இதற்கு உடனடியாகத் தீர்வுகாணப்படா விட்டால் முடிவுகள் எப்படி போகும் என்பதை எம்மால் கூறமுடியாது. நடைமுறையில் அரசாங்கம் ஒத்துழைப்புதராத 'நிலைதான் இன்று வரையுள்ளது.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதாக ஒரு தோற்றப்பாட்டை காட்டி வுருகிறதே தவிர ஒரு கட்டமைப்பினை நிறுவி மக்களுடைய மனிதாபிமான நெருக்கடிக்கு விரைந்து தீர்வுகாண அரசு முயற்சி எடுப்பதாகத் தெரியவில்லை.

பொய்யான தோற்றப்பாட்டை உருவாக்கி சர்வதேச உதவிகளை கவர்ந்திழுக்கும் ஒரு முயற்சியில் தான் அரசு இறங்கியுள்ளது தவிர பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் புரிய வேண்டும் என்பதில் அரசு அக்கறை செலுத்தவில்லை. அரசின் போக்கு எமக்கு நம்பிக்கை தருவதாகத் தெரியவில்லை.

சர்வதேச நிறுவனங்கள் முழு அளவிலான அழுத்தத்தைப் பிரயோகித்துக் கொள்கின்றார்கள்.

ஆனால் பொதுக் கட்டமைப்புக்களுக்கான உருவாக்கத்திற்கான சூழல் உருவாக்கப்படவில்லை. இனி அரசினை நம்பிக் கொண்டிருக்க முடியாது என்பதனையும் சர்வதேச சமூகத்திடம் கூறி வருகின்றோம். சர்வதேச உதவிகள் நேரடியாக இங்கு கொண்டு வரக்கூடிய வழிமுறைகளை சர்வதேச சமூகம் கண்டறிய வேண்டும் என்பதனை யதார்த்தத்தின் அடிப்படையில் வலியுறுத்துகிறோம்.

சர்வதேச சமூகத்திடம் ஒரு பாரிய பொறுப்பு உள்ளது. ஒரு மனித இனம் பேரிழிவினைச் சந்திக்கும் நிலையில் உதவிகள் செய்ய வேண்டும் என்பது சர்வதேச சமூகத்தின் கடமையும் பொறுப்புமாகும். அந்த வகையில் பேரழிவ்வச் சந்தித்து நிற்கும் எமது மக்களுக்கு சர்வதேச சமூகம் நேரடியாக உதவிபுரியும் என நம்புகிறோம். அதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகின்றோம் என்றார். (த)

## பஸ் - வான்...

குறிகட்டுவான் பேச்சிஅம்பாள் ஆலயத்திற்கு அருகில் இவ்விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் பேருந்தில் சென்ற பயணிகள் இலேசான காயங்களுடன் உயிர்தப்பினார்கள்.

வானை ஓட்டிச்சென்ற சாரதி பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த வி.தங்கர்ராசா (வயது 50) என்பவரே காயமடைந்தவராவார். (த-126)

## ஜோர்ஷ் புஷ்...

திகதிவரை இலங்கை, இந்தோனே சியா, மாலைதீவு, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு அவர்கள் விஜயம்செய்வர் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதிசேகரிக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இவர்கள் இருவரும நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையும், ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களின் புனர்நிர்மாண மற்றும் நிவாரண வேலைகளை மேற்பார்வையிடும் தனது விசேட பிரதிநிதியாக பில்கிளின்ரனை நியமித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-04,60)

## பொதுக்கட்டமைப்பு...

நிவாரண உதவிகளை வழங்குமாறும் அவர்கள் கோரியுள்ளாகள் என்றார்.

இதேவேளை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதான முயற்சிகள் குறித்து கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி செயலகத்தில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலக்ப் பணிப்பாளர் புலித்தேவனுக்கும் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கும் இடையே தொடர்ச்சியான பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் மற்றும் மனோதித்தவல ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருப்பதாகவும் அனர்த்த நிவாரணப் முகாமைத்துவம் தொடர்பில் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சமாதான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்துச்செல்ல வேண்டியது அவசியம் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.(ப.9)










இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.